Registered as a news paper.
இலவசப் பிரதி
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05, பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்
(சி-540)
(1962 முதல் யாழ். வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 09 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 19 (23.03.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :171

# வட - கிழக்கு அபிவிருத்தி, அரசியல்தீர்வு; ஜூனுக்கு முன்னர் உறுதியான முடிவுகள்!


## அரசுக்கு சர்வதேச அழுத்தம் என்கிறார் பிரதமர் ரணில்

(நமது நிருபர்)

**எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்னர் - வட, கிழக்கு அபிவிருத்தி தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் ஒரு நிலையான உடன்பாட்டிற்கு வருவதுடன், அரசியற்தீர்வு பற்றிய தெளிவான முன்வரைபு ஒன்றை உருவாக்கவேண்டிய அவசியம் அரசுக்கு இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

கொழும்பு சட்டத்தரணிகள் சங்கத்தின் ஆண்டுவிழா நேற்று கல்கிசையில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சட்டத்தரணிகளுடன் கலந்துரையாடிய போதே இதனைக் கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,



நடைபெற்றுவரும் அமைதி முயற்சிகளில் சர்வதேச ரீதியான எதிர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் பங்குபெறும் நிகழ்வுகளில் இந்தியா ஒருபோதும் பங்குபற்றாது

### தூதுவர் நிருபம் சென் நமது ஈழநாட்டுக்குத் தெரிவிப்பு

விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்ட, அவர்கள் பங்குபற்றும் எந்தப் பொது நிகழ்வுகளிலும் இந்தியா பங்குபற்றமாட்டாது. விடுதலைப் புலிகளுடன் இந்தியாவுக்குத் தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உண்டு என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தார்.

நமது நிருபருக்கு கொழும்பில் வைத்து அவர் மேலும் தகவல் தருகையில், எது எப்படியாயினும் இலங்கையில் சமாதானத் தீர்வு ஏற்படுவதில் இந்தியாவுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால், தமிழ் ஊடகங்கள் சில இந்தியா, இலங்கையில் சமாதானம் ஏற்படுவதைத் தடுக்கமுயல்வதாக தொடர்ந்து செய்திகள் வெளியிட்டு வருகின்றன. இது எமக்குக் கவலை அளிக்கின்றது என்றார். (200)

## சமாதானச் செயற்பாட்டில் அரசு –புலிகள் முன்னேற்றம்

### அமெரிக்க உதவி வெளியுறவு அமைச்சர் றொக்கா திருப்தி

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு விடுதலைப் புலிகளும் - அரசும் அர்ப்பண சிந்தையுடன் செயற்பட்டுவருவதையிட்டு அமெரிக்க உதவி வெளிவிவகார அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா திருப்தி தெரிவித்துள்ளார்.

அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபையில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு திருப்தி வெளியிட்டார்.

இலங்கையின் பாதுகாப்பையும், ஒற்றுமையையும், கௌரவத்தையும் பாதுகாக்கும் அரசியல் தீர்வை நோக்கி மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழீழக் கோரிக்கையை விடுதலைப் புலிகள் கைவிட்டனர் என்று சொல்லிலும் செயலிலும் காட்டும் அதேவேளை, அவர்கள் வன்செயல்களைக் கைவிடவேண்டும்.

பயங்கரவாத இயக்கம் என விடுதலைப் புலிகள் இயக்கத்தைக் குறிப்பிட்டுள்ள அமெரிக்காவின் பட்டியலில இருந்து, இதனடிப்படையில் அதன் பெயரை நீக்கமுடியும். இலங்கை மக்களின் நன்மை கருதி சமாதானத் தீர்வுக்கென இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவிக்க அமெரிக்கா தயாராக இருக்கின்றது என்று குறிப்பிட்ட அவர்,

பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தை அடைய முடியும் என்ற நிலைப்பாட்டுக்கு இது ஒரு உதாரணமாக அமையும் எனக் கூறினார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



உவயள் தங்களுக்கெண்டு - பயங்கரவாதம், வன்செயல் வார்த்தைகளுக்கு இலக்கணம் வச்சிருக்கினம்!

## சரக்குக் கப்பல் அழிக்கப்பட்டதில் பாதிப்புற்ற வணிகர்களுக்கு இலகு கடனுக்கு பிரதமர் பணிப்பு

கடந்த காலங்களில் தாக்குதல்களில் சிக்கி, கடலில் மூழ்கிய சரக்குக கப்பல்களினால் பாதிப்புற்ற வர்த்தகர்களுக்கும் தொழில் இழந்தவர்களுக்கும் இலகு தவணைக்கடன் வழங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தி.மகேஸ்வரனின் வேண்டுகோளுக்கிணங்க, நேற்றுமுன தினம் அலரி மாளிகையில் - பிரதமர் தலைமையில் யாழ். மாவட்ட அபிவிருத்தி சம்பந்தமான கூட்டம் நடைபெற்றது.

யாழ். மாவட்டத்தில் இனங் காணப்பட்ட உடனடி சமூக நல நோம்பு, உட்கட்டமைப்பு சம்பந்தமாகவும் - 'அஸ்ரோறியா', 'பிறின்ஸ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஏப்ரல் முதல் ஞாயிறிலும் 'ஏ-9'

வரும் ஏப்ரல் மாதம் முதல் ஏ-9 பாதையை ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முயற்சிகள் எடுத்து வருகிறது.

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் தமக்கு விடுத்த கோரிக்கையினை அடுத்து, செஞ்சிலுவைச்சங்கம் ஏ-9 பாதையிலுள்ள

(10 ஆம் பக்கம் பார்க்க)

# ஈரான் மீதும் அமெரிக்க ஏவுகணைகள்; வட ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்!



அமெரிக்க விமானத் தாக்குதலில் காயமுற்று அலறும் ஈராக்கிய குழந்தை

ஈராக் மீது அமெரிக்கா நடத்திய ஏவுகணைத் தாக்குதலின்போது நேற்று மூன்று ஏவுகணைகள் தவறுதலாக அயல்நாடான ஈரானுக்குள் விழுந்துள்ளன. இச்சம்பவத்திற்கு அமெரிக்கா ஈரானிடம் மன்னிப்புக் கோரியுள்ளது.

### செய்தியாளரைக் காணவில்லை

பிரிட்டிஷ் தொலைக்காட்சியான ஐ.ரி.வி. நிறுவனத்தின் செய்தியாளர் ரெரி லொயிட் மற்றும் தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர் ஆகியோர் கடும் சண்டை நடைபெறும் ஈராக் நகரான இமான் அனஸிலிருந்து காணாமற் போயுள்ளனர். இவர்களில் ஒருவரான மற்றொரு படப்பிடிப்பாளர் காயங்களுடன் தப்பிவந்துள்ளார். தனது சகாக்களுக்கு என்ன நடந்தது என தனக்குத் தெரியவில்லை என அவர் கூறினார்.

### ஹெலிகள் வீழ்ந்து 7 பிரிட்டிஷ் வீரர்கள் பலி

பிரிட்டனின் விமானந்தாங்கிக் கப்பலான ஆர்க் றோயலில் இருந்து புறப்பட முயன்ற இரு சீ-கிங் ரக ஹெலிகொப்ரர்கள் ஒன்றுடனொன்று மோதி வெடித்ததில் - 7 பிரிட்டிஷ் படையினரும் ஒரு அமெரிக்க விமானியும் பலியாகினர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



ஆர்க் றோயல் கப்பலில் விபத்துக்குள்ளான சீ - கிங் ரக ஹெலிகொப்ரர்கள்

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.
(சி-626)

# போர் புரிய பலம் இருக்கிறது; சமாதானத்தைக் கைவிடோம்!

## 11 மாவீரர் நினைவுக் கூட்டத்தில் அரசண்ணா உரை

"1987 ஆம் ஆண்டு குமரப்பா புலேந்திரனின் வீரச்சாவை அடுத்து, 1999 இல் கிட்டண்ணா உட்பட 10 பேர் வீரகாவியம் ஆனார்கள். இன்றோ சிலம்பரசன் உட்படப் பதினொரு வீரர்கள் சமாதானச் சூழலில் வீரகாவியம் ஆனார்கள். கடலில் நடந்த நிலைப்பாட்டுச் செய்தி தலைமையகத்திற்கும் கண்காணிப்புக்குழுவிற்கும் தெரியப்படுத்தப்பட்டு, இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்த்து விடுங்கள் என்று தத்துவாசிரியர் பாலா அறிவிப்பதற்கு முன்னர், விரைந்து வந்த அறிவித்தல் கப்பல் எரிகிறது என்பதே."

- இவ்வாறு நெல்லியடியில் நடைபெற்ற 11 மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசிய அரசியல் பயிற்சிக் கல்லூரி அதிபர் அரசண்ணா தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் பேசும் போது, கண்காணிப்புக் குழுவிற்குத் தெரியாமலேயே, அவர்களுக்குச் செய்தி போவதற்கு முன்னரே இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது. கப்பலில் சரக்கு மட்டுந்தான் இருந்திருக்கிறது. ஆயுதம் எதுவும் இருக்கவில்லை. அரசாங்கத்துக்கு அப்படி ஒரு அவசரம் ஏன் வந்தது? திரவியம் தேடுவதற்காகச் சென்ற புலிகள் வீரச்சாவு நடக்குமென்று எதிர்பார்த்திருக்கக்கூடமாட்டார்கள்.

மானிப்பாயில் இடுப்புப்பட்டி அறுத்தெறிந்த சம்பவத்தில் பெண் புலிகள் காயப்பட்டார்கள். பேச்சுவார்த்தை நடக்கும் இந்தக் காலகட்டத்திலே, எல்லாவற்றையும் அறுத்தெறிவதுபோல் கடற்படையினர் நடந்துகொண்டிருக்கிறார்கள். இந்தக் கடற்படையினருக்கு யார் உத்தரவிடுவது? முப்படைத்தளபதியான ஜனாதிபதி சந்திரிகாதான். சந்திரிகாவின் அதிகாரத்தினாலேதான் இவை நடக்கின்றன.

இந்தப் பதினொரு மாவீரர்களின் வீரச்சாவு சமாதான காலத்திலே தேவையற்றதாகும். உலக நாடுகள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கின்றன. இனி என்ன நடக்கப் போகிறது என்பதையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றன. இடுப்புப்பட்டி கழற்றிய விடயம் திட்டமிட்டுச் செய்த வேலை. இடுப்புப்பட்டியிலே கைவைத்தது தமிழரின் மானத் திலே கைவைத்தது போலாகும்.

மானிப்பாயிலே வயோதிப மாது ஒருவர், பொறுத்தது போதும் அடியுங்கடா என்றார். சமாதானம் முறிந்தால் முறியட்டும் என்றும் சொன்னார். இதற்கு முன்னர் 17,668 மாவீரர்களை இழந்திருக்கிறோம். சிலம்பரசன் உட்பட பதினொரு மாவீரர்களுடன் 17,679 மாவீரர்களை இழந்திருக்கிறோம்.

ஒரு வல்லரசு- படைகளைக் கொண்டு புலிகளை அழிக்க நினைத்தார்கள். முடிந்ததா? முடியவில்லை. ஏற்கனவே மூன்று பெரிய வன்முறைகள் நடந்து முடிந்திருக்கின்றன.

இனிமேல் எந்தவொரு வன்முறையையும் செய்ய முடியாது எனக் கூறவிரும்புகிறோம். சண்டையை நாங்கள் தொடங்க மாட்டோம். விடுதலைப் புலிகளான நாங்கள் தரத்திலே உயர்ந்து கொண்டிருக்கிறோம். கைகளைக் கட்டித்தான் வைத்திருக்கிறோம். பலம் இல்லாமல் அல்ல. இம்மாவீரர்கள் சாவு நெருங்கிவிட்டது என எதிராளிகளைச் சந்திக்கும் பொழுது நினைத்திருப்பார்கள். சரணடைந்து இருக்கலாம். சரணடைவது வீரத் தமிழரின் மரபு அல்ல.

நீண்டகால யுத்தத்தின் பின்னர் இரு தரப்பினரும் பரஸ்பரம் நம்பிக்கையை உருவாக்கி இருக்க வேண்டும். அப்படி நடக்கவில்லை என்பதை இச்சம்பவம் எடுத்துக் காட்டுகிறது. மானிப்பாயிலே இடுப்புப்பட்டி விடயம் யாவரும் அறிந்ததே. இடுப்புப்பட்டிதானே என்று நாங்கள் விட்டுவிடவில்லை. இந்தச் சமாதானம் நிலைக்கவேண்டுமென மக்கள் நினைக்கிறார்கள். புலிகள் இதற்காக இணைந்து செயற்படுகிறார்கள். இலங்கை முழுவதையும் சிங்கள அரசாங்கம் தங்களுடையது என நினைக்கிறது. தமிழ்த் தேசமே எங்களுடையது என விடுதலைப் புலிகளாகிய நாங்கள் நினைக்கிறோம்.

கடந்த காலங்களில் தீர்வுகளுக்கு எதிர்ப்புத்தான் நடந்திருக்கிறது. ரணிலின் பிரேரணைக்கு சந்திரிகா எதிர்ப்பு, சந்திரிகாவின் தீர்வுக்கு ரணில் எதிர்ப்பு. தந்தை செல்வாவின் தீர்வுக்கு பண்டாரநாயக்க எதிர்ப்பு. டட்லியின் தீர்மானத்துக்கு ஸ்ரீமா எதிர்ப்பு என தீர்வுகளுக்கு எதிர்ப்பே நடக்கிறது.

ஆசியாவில் தேசப்பற்று தமிழ் மக்களுக்குத்தான் உண்டு. தமிழீழத் தேசியம் கட்டி எழுப்பப்படுகின்றது. தமிழ்த்தேசிய இனம் இருக்கிறது எனச் சகலரும் அறிவர். எது வருகிறதோ அது வந்துகொணடே இருக்கிறது. ஆனால், இறுக்கத்தைக் கைவிடாத தமிழீழம் இருக்கிறது. இந்த இனத்திற்கு விடுதலை கொடுக்க வேண்டுமென்ற தீர்மானத்திற்கு ஸ்ரீலங்கா வந்திருக்கிறதா? இல்லையென நினைக்கிறோம்.

இந்தப் பதினொரு மாவீரர்களும், தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலையைத் தாங்கி நிற்கிறார்கள். புலிகளிடம் அசையாதே என்றால் அசையாது. ஸ்ரீலங்கா அரசாங்கத்தில் அசையாதே என்றால் அசையும். காரணம் என்ன? ரணிலும் சந்திரிகாவும் முரண்பட்டு நிற்பதே. எங்களுக்குச் சண்டை செய்யப் பலம் இருக்கிறது. இதற்காகச் சமாதானத்தைக் கைவிடப் போவதில்லை. சண்டைக் காலத்தில வீரச்சாவு என்றால் தாங்கிக் கொள்ளலாம். சமாதான காலத்திலே வீரச்சாவு என்றால் யார் தாங்கிக் கொள்வார்கள்?

இந்தப் பதினொரு மாவீரர்களின் எண்ணம் மக்கள் நிம்மதியாக இருக்க வேண்டும் என்பதே என்றார் அரசண்ணா.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் செபஸ்தியான் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். தொடர்ந்து முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் துரை சத்திய சீலன், கட்டைவேலி - நெல்லியடி கூட்டுறவுச்சங்கப் பணிப்பாளர் காந்தி மதிநாதன் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் தீபச்சுடர் ஏற்றல், அகவணக்கம் என்பன இடம்பெற்றன. பிற்பகல் 5 மணியளவில் திருவருவப் படங்களுக்கு போராளிகளாலும், மாணவ மாணவிகளாலும் பொதுமக்களாலும் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

### சுயதொழில் பயிற்சிப்பட்டறை

தொழிற்துறைத் திணைக்களமும், ஜீ.ரி.இசற் நிறுவனமும் இணைந்து யாழ்.பல்கலைக்கழகத்தின் ஆதரவுடன் நடத்திவரும் தொழிலாளர், முயற்சியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை, எதிர்வரும் 26 ஆம் திகதி ஆரம்பித்து தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

### நூல் வெளியீட்டு விழா

(வடமராட்சி கிழக்கு)

அன்னையின் பிள்ளைகள் எழுதிய நினைவுக் குறிப்புகளின் தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா, எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 1 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில், கல்லூரி அதிபர் திருமதி கே.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நூலுக்கான அறிமுக உரையை சுவாமி சித்ரூபானந்தா நிகழ்த்தவுள்ளார்.

### மானிப்பாயில் புதிய சேமிப்பு வங்கி

(மானிப்பாய்)

மானிப்பாய் பிரதான வீதி, மத்திய சந்தைக்கு அண்மையில் புதிதாக தேசிய சேமிப்பு வங்கி திறக்கப்படவுள்ளது. இதற்காக தனியார் வாடகைக் கட்டடம் பெறப்பட்டு வேலைகள் யாவும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளது.

இதேவேளை, திருநெல்வேலியிலும் புதிய தேசிய சேமிப்பு வங்கி திறக்கப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(100)

# இயல்புநிலை தோன்றினால்தான் சமாதான முயற்சி வெற்றியடையும்

## யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

வடக்கு- கிழக்கில் இயல்பு நிலையை உருவாக்குவதில் தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள இவ் வேளையில், சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட வேண்டுமானால், மக்களின் வாழ்வில் இயல்பு நிலை தோற்றம்பெற வேண்டும் என, யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வேயின் அனுசரணையுடன் நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள் 6 ஆம் சுற்றை எட்டியபோதும் இரண்டு முக்கிய விடயங்களை மையமாகக் கொண்டிருந்தும், ஒரு விடயத்தை அமுல்படுத்துவதில் அரசும் படைத்தரப்பும் கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வருவது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியவையாகும் எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

20 வருட காலப்போருக்கு முடிவு கண்டு, இனப்பிரச்சினைக்கு நீடித்த நிலையானதொரு அரசியல் தீர்வு காணப்படும் அதேநேரம், அதற்குச் சமாந்தரமாக, இந்தப் போரினால் சீரழிந்த தமிழர் தாயகத்தைக் கட்டியெழுப்பி, அப்பகுதிகளில் இயல்புநிலையைத் தோற்றுவித்து, புலம்பெயர்ந்த மக்களை நிம்மதியாக வாழவிடுவதுமே இந்த பேச்சுக்களினதும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினதும் முக்கிய நோக்கமாகும்.

ஆனால், யுத்தம் நடைபெற்ற காலத்தைப் போன்று தற்போதும், வடக்கு - கிழக்கின் சகல பகுதிகளிலும் படையினர் நிற்பதும், முகாம்களைக் குறைக்காது அதியுயர் பாதுகாப்பு வலயங்கள், பாதுகாப்பு வலயங்கள், படைமுகாம்கள் என்றும் மக்கள் குடியிருப்புக்களை ஆக்கிரமித்துள்ளதுடன், வெளியேற மறுப்பதும் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அதியுயர் மனிதஉரிமை மீறலாகும். சொந்த மக்களை தமது சொந்த இருப்பிடங்களில் குடியமர மறுத்து வேறு இடங்களுக்கு குடியமருமாறு அச்சுறுத்துவதற்கு எவருககும் உரிமை கிடையாது என்பதை, இத்தால் சுட்டிக்காட்ட விரும்புவதுடன், இதற்கான கடும் எதிர்ப்பையும் தெரிவிக்க விரும்புகிறோம். இது விடயத்தில் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளும் எம் பிரதிநிதிகள் பொறுமையைக் கடைப்பிடித்து, நிதானத்தை இழக்கமாட்டார்கள் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

இந்நிலையில், அதியுயர் பாதுகாப்பு வலயங்களின் படைமுகாம்களை பின்னகர்த்துவது தொடர்பாக, இலங்கை அரசு, இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் நம்பியாரின் அறிக்கைக்காக காத்திருக்கிறது. ஏற்கனவே, இந்த அமைதி முயற்சிக்கு பல்வேறு வழிகளில் முட்டுக்கட்டை போட்டு வரும் இந்தியாவின் நிலைப்பாட்டின் ஊடாக, சதீஸ் நம்பியார் வழங்கப் போகின்ற அறிக்கை பற்றி நாம் ஆச்சரியப்பட வேண்டிய அவசியம் ஏதுமில்லை. எவரிடமிருந்தும் பெறும் அறிக்கைகளினால் எதுவித பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை அல்லது இலங்கையின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படப் போவதுமில்லை.

ஆதலால், அரசு இது விடயத்தில் பொருத்தமான தீர்வொன்றை எட்டுவதற்குரிய ஒரேவழி - உயர் பாதுகாப்பு வலயங்களை நீக்கி, மக்கள் மீளக் குடியமர நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான். இராணுவம் மற்றும் கடற்படையினர் மக்கள் குடியிருப்புக்களில் இருந்து முற்றாக விலகிக்கொள்ள வேண்டும். மக்களின் இயல்பு வாழ்வு நிலை தோன்றுமானால், சமாதான முன் முயற்சிகள் இலகுவாக முன்னெடுக்க முடியுமென யாழ்ப்பாண மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுக்கின்றது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### உடற்பயிற்சிப் போட்டி

சங்கானைக் கோட்டமட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான உடற்பயிற்சிப் போட்டி நாளை சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி, உதவிக் கல்விப் பணிப்பாளர் சீ.செல்லையா தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் தெரிவுசெய்யப்படும் அணிகள் வலயமட்டப் போட்டியில் கலந்து கொள்ளும். (118)

# புலிகள் - முஸ்லிம் பிரதிநிதிகள் வவுணதீவில் சந்திக்க ஏற்பாடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்குமான சந்திப்பு எதிர்வரும் வியாழக்கிழமை வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு அலுவலகம், இந்தச் சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளது.

இந்தச் சந்திப்பு கடந்த 12 ஆம் திகதி நடைபெறவிருந்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பல் கடலில் தாக்கப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து, இந்தக் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது.

இச்சந்திப்பில்- வீடமைப்புப் பிரதி அமைச்சர் பசீர் சேகுதாவூத் தலைமையில் முஸ்லிம் பிரதிநிதிகள் பங்குபற்றுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(க)




KTV SCV SUN NEWS SUN TV

வடபகுதி கேபிள் T.V இயக்குநர்கள் மற்றும் செய்மதி அன்ரனா மூலம் நிகழ்ச்சிகளைக் கண்டுகளிக்கும் அனைவருக்கும் sats-tech தரும் நற்செய்தி K T.V. ,SUN NEWS,SCV சனல்களை கண்டுகளிக்கக்கூடிய Decorder Smart Card தேவையானவர்கள் உடன் தொடர்புகொள்ளவும். அத்துடன்,

சண் டீ.வி
K T.V.
SUN நியூஸ்
SCV
(மற்றும் All Free to Air)

Smart Package:- Rs.50,000 only (Including Dish Antenna / LNBF/ Decorder Smart Cart / One year viewing Charge and All other Charges)

Sats-Tech.... Trusted name of this field

மேலதிக விபரங்களுக்கு:
SATS - TECH ENGINEERS
M/S National Video Centre,
182,k.k.s Road (Near Kulapity Church),
Kokuvil.
PHONE: 0777710785

(சி-704)

ராஜா யாழ்ப்பாணம்.
சரத்குமார், மீனா, விஜயகுமார், வடிவேல் நடித்த
மாயி
நேரம்:- 10.30, 2.30, 6.30 (சி-628)

சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
அர்ஜுன், பூஜா நடித்த
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
HOLLOW MAN
(சி-627)

AMRUTANJAN



எல்லாவிதமான வலிகளுக்கும் நோவுகளுக்கும்

அமிர்தாஞ்சன் 100 ஆண்டுகளுக்கும் மேலாக அனைவரது நம்பிக்கையையும் பெற்றுள்ள பெயர். அமிர்தாஞ்சன் பெயின்பாம், அமிர்தாஞ்சன் ஸ்ட்ராங் ஆகியவை அதன் தயாரிப்புக்களில் அடங்கும். இவை பலவிதமான வலிகளிலிருந்தும், நோவுகளிலிருந்தும் நிவாரணம் அளிக்கின்றன.

ஏக விநியோகஸ்தர்
சிறிகாந் எசன்ஸ் & குறோசரிஸ்
161, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P. : 021-2222219
(சி-702)

வலிகளை நாங்கள் நன்றாகவே அறிவோம்

# ஒரேயொரு இலங்கைப் பெண் மட்டுமே ஈராக்கில் தொடர்ந்தும் இருக்கிறார்!

## ஏனையோர் நாடு திரும்பிவிட்டதாக அறிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் படையெடுப்புக்குள்ளாகியிருக்கும் ஈராக்கில் - ஒரேயொரு இலங்கைப் பிரஜை மட்டுமே தற்போது தங்கியிருப்பதாகப் பிரதி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஈராக்கில் போர் வெடித்த பின்னர் மத்தியகிழக்கில் உள்ள இலங்கையரின் பாதுகாப்புக் குறித்து செய்தியாளரிடம் பேசியபோதே லக்ஷ்மன் கிரியெல்ல இத்தகவலை வெளியிட்டார்.

ஈராக்கில் 27 இலங்கையர்கள் மட்டுமே இருந்தனர். அவர்களில் 26 பேர் பாதுகாப்பாக நாடு திரும்பியுள்ளனர். ஒரேயொரு பெண் மட்டுமே தற்போது ஈராக்கில் தங்கியுள்ளார். அவர் 15 வருடங்களுக்கு முன்னர் ஈராக்கியர் ஒருவரைத் திருமணம் செய்துள்ளார். இவர் அங்கிருந்து வெளியேற மறுப்புத் தெரிவித்துள்ளார்.

பக்தாத்திலுள்ள இலங்கைத் தூதுவரும் பாதுகாப்பாக நாடு திரும்பி விட்டதாகவும் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மத்தியகிழக்கிலிருந்து அவசரமாக நாடு திரும்பும் இலங்கையரின் நன்மை கருதி, அவசரகால நெருக்கடி நிதியம் ஒன்றை அரசாங்கம் ஸ்தாபித்துள்ளது.

அமைச்சர்கள் மகிந்த சமரசிங்க, ரிரோன் பெர்ணான்டோ ஆகியோர் சிபார்சு செய்ததற்கமைய இந்த அவசரநெருக்கடி நிதியத்தை அமைப்பதற்கான ஒப்புதலைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அளித்துள்ளார்.

மத்தியகிழக்குப் பகுதியில் வேலை பார்க்கும் இலட்சக்கணக்கான இலங்கையர்களைப் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டுசெலலவும், நாடு திரும்புவோருக்கான விமானப் பயணச்சீட்டுக்களுக்கான உதவிகளையும் இந்த நிதியம் வழங்கவுள்ளது.

மத்தியகிழக்கில் இருந்து நாடு திரும்பும் இலங்கையர்களை ஏற்றி வருவதற்கு இந்திய, ஜப்பானிய விமான நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன. அத்துடன், கொழும்புவரும் மத்தியகிழக்கில் பணியாற்றும் இலங்கையர்களுக்கு - அந்நாட்டு நாணயங்களை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மாற்றிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் விமானநிலையத்தில் செய்யப்பட்டிருப்பதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

(200)

# ஹிரோஷிமா நகருக்கு புலிகள் குழு விஜயம்!

(ரோக்கியோ)

ஜப்பானின் ஹெக்கோன் நகரில் இடம்பெற்ற பேச்சுகளில் பங்குகொண்ட புலிகள்தரப்புப் பிரதிநிதிகள் குழு - இன்று கொயோட்டோ நகருக்கு விஜயம் செய்யவுள்ளது.

கைத்தொழில் வளர்ச்சி பெற்ற கொயோட்டோ - ஜப்பானின் மிகவும் முக்கியமான நகரமாகும். புலிகளின் குழுவினர் இந்த நகரத்தின் வளர்ச்சி குறித்து இன்று பார்வையிடவுள்ளனர்.

ஹெக்கோனில் பேச்சுக்களை முடித்தபின்னர் புலிகளின் குழுவினர், நேற்று 2 ஆம் உலகப்போரின்போது, அமெரிக்காவினால் அணுகுண்டு வீசி அழிக்கப்பட்ட ஹிரோஷிமா நகருக்குச் சென்றனர். இங்குள்ள நினைவாலயத்தையும், அரும்பொருட்காட்சிச்சாலையையும் அவர்கள் பார்வையிட்டிருந்தனர்.

இதேவேளை, புலிகள்தரப்புப் பிரநிதிகள் குழு எதிர்வரும் 27 ஆம் திகதி நாடு திரும்பும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.



அழகிய இந்தக் கடற்கரையும், ஆட்கள் அலைமோதிய பகுதியும் - இன்று ஆளரவமற்று உயர்பாதுகாப்பு வலயமாக - (காங்கேசன்துறைக் கடற்கரையில் நேற்றைக்குப் பதிவான ஒரு காட்சி இது.)

# புஷ்ஷும், பிளேயரும் யுத்த கிரிமினல்கள்!

## பொ.ஐ.மு. பேச்சாளர் கண்டனம்

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயரும் யுத்த கிரிமினல்கள் என்று பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் திஸ்ஸ விதாரண கடுமையாகக் கண்டித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் அனுமதியின்றி ஈராக்கின் மீது- அமெரிக்கா தாக்குதலை ஆரம்பித்தது தொடர்பாகவே அவர் இவ்வாறு விமர்சித்துள்ளார்.

இது மனிதாபிமானத்துக்கு எதிரான யுத்தம் என்று விமர்சித்துள்ள அவர், இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தில் பொறுப்பற்றவகையில் நடந்து வருவதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஈராக் மீது தாக்குதல் நடத்தும் அமெரிக்கப் படைகளுக்கு- இலங்கை அரசாங்கம் எந்த உதவிகளையோ, ஒத்துழைப்புக்களையோ வழங்கக் கூடாது. இலங்கையில்- அமெரிக்க விமானங்கள் தரித்துச் செல்வதற்கோ, எரிபொருள் நிரப்புவதற்கோ அல்லது வான்பரப்பைப் பயன்படுத்துவதற்கோ அனுமதி வழங்கக்கூடாது என்றும் பொதுஜன ஐக்கிய முன்னணிப் பேச்சாளர் திஸ்ஸ விதாரண வலியுறுத்தினார்.

# பாதி நிரம்பிய போத்தல் போன்றே சமாதான முயற்சியும் தோன்றும்

## ஜப்பானிய தூதுவர் அகாஷி

ஜப்பானில் நடந்த ஆறாவது சுற்றுப்பேச்சுக்களின் முடிவில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் -அமைதி முயற்சிகளைப் போத்தலுக்குள் நிரப்பப்பட்ட பாதியளவு நீரை வைத்து ஒப்பிட்டுச் சுவாரசியமாகப் பேசினார் ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷி.

பாதியளவு நீரை நிரப்பப்பட்ட போத்தலைப் பார்க்கும் நம்பிக்கையான ஒருவன்- பாதியளவாவது நிரம்பியிருக்கிறதே எனச் சந்தோஷப்படுவான். வேறு சிலரோ நிரம்பாத பாதியளவைப் பார்த்திருப்பர், விமர்சிப்பர் எனத் தெரிவித்த அகாஷி, இது போலவே அமைதி முயற்சிகளின் முன்னேற்றமும் என்றார்.

செய்தியாளர் மாநாட்டில் பேசிய நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன்- நடந்து முடிந்த சுற்றுப்பேச்சில் முடிவுகள் எடுக்கப்படாதபோதும் முன்னேற்றம் காணப்படிருப்பதாகக் குறிப்பிட்டார்.

# இராணுவ புலனாய்வாளர் கொலை விசாரணைக்கு ரணில் உத்தரவு

(கொழும்பு)

கல்கிசையில் வைத்து இராணுவப்புலனாய்வுப்பிரிவு உத்தியோகத்தர் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டமை குறித்த விசாரணைகளை நடத்துமாறு உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவுக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ரகுபதி என்பவர் கல்கிசையில் வைத்துக் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு மோட்டார் சைக்களில் வந்த இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார். இவரது கொலை தொடர்பாகவே விசேட விசாரணைகளை நடத்துமாறு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, இந்தக்கொலை தொடர்பான விசாரணைகளைப் பொலிஸாரிடம் இருந்து குற்றப்புலனாய்வுப்பிரிவுப் பொலிஸார் பொறுப்பேற்றுள்ளனர். விசாரணையைப் பொறுப்பேற்றுக்கொண்ட குற்றப்புலனாய்வுப்பிரிவு- மட்டக்களப்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக விசேட பொலிஸ் குழுவொன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

இதேவேளை, வவுனியா - செட்டிக்குளத்தில் கடந்த வியாழக்கிழமை சடலமாக மீட்கப்பட்ட பஸ்சாரதி - இராணுவத்தினருக்குத் தகவல் வழங்குபவர் என்று இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை காணமற்போன இவரது சடலம்- கடந்த வியாழக்கிழமை கண்டுபிடிக்கப்பட்டது. இச்சம்பவம் குறித்தும் பொலிஸ் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டிருக்கின்றன.

# கலைஞர்களிடையே உறவை வளர்க்கவே யாழ்ப்பாணத்துக்கு நாம் வந்துள்ளோம்!

## 'சினி யாத்திரா'வுக்கு வந்த சிங்களத் திரைப்பட இயக்குநர்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலம் தீர்க்கப்படாத நிலையிலுள்ள யுத்தத்தினை, ஒரு நாட்டினுடைய கலாசார நடவடிக்கைகள் மூலம் மாற்றியமைக்க முடியும் என்று சினி யாத்திரா திரைப்பட விழாவுக்காக யாழ்ப்பாணம் வந்துள்ள திரைப்பட இயக்குநர் தர்மசிறி பண்டாரநாயக்க யாழ். சிற்றி மண்டபத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், அரசியல் ரீதியாகப் பேசப்படும் பேச்சுகளைவிட, கலைஞர்களிடையே காணப்படும் உறவு வலிமை பெற்றது. அத்தகைய உறவு ஒன்றை யாழ்ப்பாணத்திலும் வளர்க்கவே நாம் யாழ்ப்பாணம் வந்துள்ளோம், தெற்கிலிருக்கும் சில திரைப்படங்களை- வடக்கில் காட்டுவது என்பது ஒரு பிரச்சினையாகாது என்பதை நான் அறிவேன். இத்திரைப்படங்கள் மூலமாகவோ, திரைநாடகங்கள் மூலமாகவோ யுத்தத்தை நிறுத்தமுடியாது ஆனால், ஓரளவேனும் அதனைக் குறைக்கமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இச்சந்திப்பு புறநிலைப்பட்டப்படிப்பின் இணைப்பாளர் பேராசிரியர் சிவச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இச்சந்திப்பின்போது மக்கள் வங்கியின் இணைப்பாளர் விஜித மழலசேகர, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். எம்.எம். பொறுபபதிகாரி அனுர டீ சில்வா, அறிவிப்பாளர் சந்திரகாந்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

(சு)

# அமெரிக்க, ஈராக் அரசுகள் எம்மிலிருந்து கற்க வேண்டும்!

## புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவிப்பு

அமெரிக்காவும், ஈராக்கும் எமது நாட்டிலிருந்து உதாரணங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

ஹெக்கோனில் சர்வதேசச் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

நீண்டகாலப் போருக்குப் பேச்சுக்களின் மூலம் தீர்வுக்காண நாம் எவ்வாறு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதை அமெரிக்காவும், ஈராக்கும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இந்தப் பிரச்சினையில் ஐ.நா. தலையிட்டுச் சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டும். ஐ.நாவின் அங்கீகாரமின்றி ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்துகின்ற அதேவேளை சதாமின் சர்வாதிகாரத்தனத்தையும் ஐ.நாவை கௌரவிக்காத தன்மையையும் தாம் கண்டிப்பதாகவும் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

# குடாநாட்டிலுள்ள சகல படகுகளும் உடன் பதிவு செய்யப்பட வேண்டும்!

## கடற்தொழில் உதவிப்பணிப்பாளர் கோருகின்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்துப் படகுகளையும் கடற்தொழில் பரிசோதகரிடம் பதிவு செய்யுமாறு கடற்தொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் அன்ன ஜோசப் கேட்டுள்ளார்.


கடற்தொழிலாளர்களின் பாதுகாப்புக் கருதியும், அண்மைக்காலமாக இடம்பெற்ற சில சம்பவங்களைக் கருத்திற்கொண்டும் சகல மீனவர்களும் தமது படகுகளையும், அது தொடர்பான ஆவணங்களையும் சமர்ப்பித்து, பதிவுகளை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

சகல கடற்தொழிலாளர்களும் படகு தொடர்பான ஆவணங்களையும்- கடற்தொழில் பரிசோதகரிடம் சமர்ப்பித்துப் பதிவுகளை மேற்கொள்ளுமிடத்தில், அவர்களது படகுகளைப் பதிவு செய்வது தொடர்பான அனுமதியைக் கடற்தொழில் பணிப்பாளரிடமிருந்து பெறமுடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, விடுதலைப்புலிகளுக்கும் - அரசுக்குமிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தாகியதன் பின்னர், கண்டி வீதி வழியாக வெளிமாவட்டத்திலிருந்து பல படகுகள் யாழ்ப்பாணம் வந்துள்ளதால், அவை அனைத்தும் உடனடியாகவே பதிவுசெய்ய வேண்டும என்று அவர் மேலும் தெரிவித்தார். (சு)

# பஸ்ரா நகர் சுற்றிவளைக்கப்பட்டது;
# 8000 ஈராக் படை முற்றுகையில்!

## 24 மணிநேரத்தில் பக்தாத்தில் மட்டும் 1500 விமானக்குண்டுகள்



சதாம் மாளிகை வளாகத்தினுள் குண்டுகளால் சிதைந்த கட்டடம்.

(பக்தாத்)

தென் ஈராக்கினூடாக அமெரிக்க- பிரிட்டிஷ் படைகள் முன்னேற்ற முயற்சியைத் தீவிரப்படுத்தியுள்ள அதேவேளை- பக்தாத் நகரிலுள்ள முக்கியமான மையங்களைக் குறிவைத்து- விமானக் குண்டு வீச்சுக்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

போர் தொடங்கிய முதலாவது 24 மணித்தியாலத்தில் மட்டும், 1500 விமானக் குண்டுகள் பக்தாத்தில் போடப்பட்டதாக பென்ரகன் தெரிவித்தது.

அதைவிட- 320 ரொம்ஹொக் குரூஸ் ஏவுகணைகள் பக்தாத்தைத் தாக்கியதாக அமெரிக்கத் தளபதி ஒருவர் கூறினார்.

பக்தாத்தின் வான்பரப்புக்குள் வரும் அமெரிக்க - பிரிட்டிஷ் விமானங்கள் மீது, ஈராக்கியர்கள் தொடர்ந்தும் விமான எதிர்ப்பு ஆயுதங்களால் தாக்கிவருகின்றனர்.

இதேவேளை- அமெரிக்கப் படைகளால்- ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரமான பஸ்ரா சுற்றிவளைக்கப்பட்டிருப்பதாகவும்,அங்கு நிலைகொண்டிருந்த ஈராக்கின் 51 ஆவது காலாட்படைப் பிரிவைச் சேர்ந்த 8000 படையினர் முற்றுகையிடப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எனினும், இது நடுநிலையாளர்களால் உறுதிப்படுத்தப்படவில்லை.

## அமெரிக்காவின் கோரிக்கை நிராகரிப்பு





ஈராக்கிய இராஜதந்திரிகளை அந்தந்த நாடுகளிலிருந்து வெளியேற்றுமாறு - பிரான்ஸ், ரஷ்யா, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு அமெரிக்கா விடுத்த வேண்டுகோளை - அந்நாடுகள் நிராகரித்துவிட்டன.

பின்லாந்து, நெதர்லாந்து, மலேசியா ஆகிய நாடுகளும் இந்தப் பட்டியலில் சேர்ந்துவிட்டதாக இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. உலகளாவிய ரீதியில் 62 நாடுகளில் உத்தியோகபூர்வமாக ஈராக் இராஜதந்திரிகள் தங்கியிருந்து பணியாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## ஆயிரம் கொமாண்டோக்களுடன் துருக்கி நுழைந்தது ஈராக்கில்!

### எரிச்சலடைகிறது அமெரிக்க அரசு



ஈராக்கிய எல்லைக்குள் - துருக்கிப் படையினரின் ஆயிரம் கொமாண்டோக்கள் நுழைந்திருக்கின்றனர்.

குர்திஷ் மக்கள் வாழும் பகுதிக்குள் இவர்கள் நுழைந்திருப்பதை - துருக்கிய வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா ஹல் உறுதிப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவுக்கு தனது விமானத் தளத்தை பயன்படுத்த துருக்கி அனுமதி தந்தபின்னர் - நடந்திருக்கும் இந்த உள்நுழைவு - அமெரிக்காவுக்கு எரிச்சலையே ஏற்படுத்தியிருக்கின்றது.

துருக்கியப் படையினருக்கும் - வட ஈராக்கைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் குர்திஷ் இராணுவத்தினருக்கும் சண்டைகள் மூழலாம் என்பதாலும் - இது அமெரிக்காவின் நோக்கைப் பாதிக்கும் என்பதாலும் - துருக்கியின் நடவடிக்கையை தாம் விரும்பப்போவதில்லை என அமெரிக்க உயர் அதிகாரியொருவர் வொஷிங்ரனில் தெரிவித்தார்.

### உலகவலம்

## ஈராக் ஏவுகணை அச்சம்; தூக்கமின்றி தவிக்கிறது குவைத்!



(பஹ்ரெய்ன்)

குவைத் நகரைக் குறிவைத்து ஈராக்கின் ஏவுகணைகள் விழத் தொடங்கியிருப்பதால் - அங்கு பதற்றம் பெருகிவருகின்றது.

குவைத் நகரில் மக்கள் தூக்க மற்றுத் தவிப்பதாகவும் - அபாய சைரன்கள் அடிக்கடி ஒலிப்பதால், அதுவேறு பதற்றத்தை அதிகரிப்பதாகவும் - அங்கிருந்து வெளியாகும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை- குவைத் நகரில் பல கடைகளிலும்- இரசாயன ஆயுதத் தாக்குதலில் இருந்து தப்பும் முகமூடிகள் பரவலாக, வழக்கத்திற்கு அதிகமாக விற்பனையாகி வருகின்றன என்றும் ஒரு செய்தி கூறுகின்றது.



சரணடைந்த ஈராக்கியப் படைவீரரைச் சோதனையிடும் ஒரு அமெரிக்கச் சிப்பாய்.



பாலைவனங்களூடு நுழையும் அமெரிக்க டாங்கி - மகனுடன் செல்லும் ஈராக்கியத் தாய் ஒருவரைக் கடந்து செல்கிறது.





குண்டுகள் வீழ்ந்தாலும் சதாமின் இராணுவ அதிகாரிகளுடனான கலந்தாலோசனை தொடர்கிறது.

## பக்தாத்திலுள்ள ரடார்களை அழிக்க அமெரிக்க விமானப்படை முயற்சி!



அதிவீச்சுடன் பறக்க ஆரம்பிக்கிறது ரொர்னாடோ

(பக்தாத்)

பக்தாத்துக்குள் தாக்குதல் நடாத்திவரும் விமானங்களுக்கு - பாதுகாப்பைத் தருவதற்காக - பக்தாத்திலுள்ள ரடார் நிலையங்களைக் குறிவைத்து அழிக்கப் பயன்பட்டு வருகின்றன - 'ரொர்னாடோ ஜி. ஆர். 4' ரக தாக்குதல் விமானங்கள்.

ரடார் நிலைகள் சிதைக்கப்பட்டால் ஏனைய விமானங்கள் இலகுவாக ஈராக் வான்பரப்பிற்குள் நுழைந்து தாக்குதலைத் தீவிரப்படுத்தாம் என்ற தந்திரோபாயம் அமெரிக்காவால் பின்பற்றப்படுகின்றது.

1991 இல் நடந்த பாலைவனப் புயல் நடவடிக்கையிலும் பார்க்க- தற்போது புதிய இராணுவத் தந்திரோபாயங்களை அமெரிக்க- பிரிட்டிஷ் கூட்டுப்படையினர் பயன்படுத்துவதன ஒரு தொடர்ச்சியே இது என- தாக்குதலில் ஈடுபட்டுவரும் விமானப்படையின் கப்டனான சிமன் டொப் என்பவர் கூறினார்.

ரொர்னாடோ விமானங்கள் ஜேர்மனி, இத்தாலி, பிரித்தானிய நாடுகளின் கூட்டுத் தயாரிப்பாகும். 1980 முதல் இந்த விமானங்களை பிரிட்டிஷ் விமானப்படை பயன்படுத்தி வருகின்றது.

இரட்டை இயந்திரங்களைக் கொண்ட இந்த விமானங்கள், மணிக்கு 1452 மைல் வேகத்தில் செல்லக்கூடியன. 18000 இறாத்தல் வெடிபொருட்களை இவ்விமானங்கள் காவிச்செல்லும் வலுமிகுந்தவை.

## போர் எதிர்ப்பு தீவிரம் நாளுக்கு நாள் வலுக்கிறது!

(லண்டன்)

அமெரிக்க - பிரிட்டிஷ் படைகள் ஒருபுறம் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்த -மறுபுறம் உலகளாவியரீதியில் - ஈராக் மீதான தாக்குதலைக் கண்டிக்கும், எதிர்ப்புத் தெரிவிக்கும் போராட்டங்களும் வேகம் பெறுகின்றன.

உலகளாவிய ரீதியில் நடைபெறும் இந்தப் போராட்டங்களில் பங்கேற்கும் மக்களின் தொகையும் நாளாந்தம் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



ஈராக்கிற்குள் நுழைந்த அமெரிக்கப்படை வாகனம் ஒன்று தாக்கப்படும் ஆபத்துச்சூழ, இரு அமெரிக்கர்கள் பதுங்கிடம் நோக்கி ஓடுகின்றனர்.

# 'பாட்டும்' நானே



நான் என்ன குற்றம் செய்தேன்?

# 'பாவமும்' நானே

2003 உலகக்கிண்ணப் போட்டிகளில் சிம்பாப்வே சார்பில் விளையாடிய அண்டி பிளவர், ஹென்றி ஒலங்கா இருவரும் கிரிக்கெட் வீரர்கள் என்ற பாத்திரத்துக்கு அப்பால், சிம்பாப்வேயை நேசிக் கும் பிரஜைகள் என்றவகையிலும் தம்மை இனங்காட்டியுள்ளார்கள். அதாவது, சிம்பாப்வேயில் ஜனநாயகம் செத்துவிட்டது என்ற தம் ஆதங்கத்தை வெளிப்படுத்தக் கறுப்புப்பட்டிகளை அணிந்து உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடினார்கள். இது அரசசார்புத் தொடர்பில் இரு வருக்கும் எதிரான உணர்வலைகளைப் பெருமளவில் எழுப்பிவிட்டிருந்தது. இதன் காரணமாக அண்டி பிளவர்- அவுஸ்திரேலியா செல்லத் தீர்மானித்துவிட்டார்.

மற்றவர் ஹென்றி ஒலங்கா. இவரது நடவடிக்கைகள் இவரைத் தேசத்து ரோகியாகக்கூட அரசாங்கத்தால் பார்க்கவைக்கும் என்று கருதப்பட்டது. தற்போது ஒலங்கா சர்வதேசக் கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து விலகிக்கொள்வதாக அறிவித்திருக்கிறார். மேலும் இவர் சிம்பாப்வே திரும்பாமல், இங்கிலாந்தில் அரசியற்தஞ்சம் கோரக்கூடும் என்றும் ஒரு கதை அடிபடுகின்றது. ஒலங்காவின் கூற்றுப்படி- தான் வேண்டப்படாதவன் என்றும், குறி வைக்கப்பட்டவன் என்றும், தனக்கு **E MAIL** கள் வந்துகொண்டிருப்பதாகவும் கூறியிருக்கின்றார். தன்னை இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் விளையாடுமாறு கேட்டதாகவும், பாதுகாப்புக் காரணங்களுக்காகத் தான் விளையாட மறுத்துவிட்டதாகவும் சிம்பாப்வே கிரிக்கெட் அணியில் முதன் முதலாக இடம் பிடித்த இந்தக் கறுப்பின வீரர் கூறுகிறார்.

கிடைக்கும் தகவல்களின்படி ஒலங்கா- தென்னாபிரிக்காவில் தலைமறைவாக இருப்பதாவும்- அவரது மனைவியும், மூன்று பிள்ளைகளும் ஏற்கனவே இங்கிலாந்துக்குப் புறப்பட்டுவிட்டதாகவும் தெரியவருகின்றது.


நானும் தான் செய்த குற்றம் என்ன?

நான் சில வேளைகளில் சிம்பாப்வே திரும்ப எண்ணியிருக்கக் கூடும்.

ஆனால், என் தந்தையாரின் அறிவுரைகளின் பேரிலேயே அதனைத் தவிர்த்துக் கொண்டேன்.

ஆனால், தற்போது தென்னாபிரிக்காவில் நிற்பதே எனக் குப்பயமாயிருக்கிறது என்கிறார் ஒலங்கா.

இங்கிலாந்து சென்றால், அவருக்கு இங்கிலாந்துக் கவுன்ரிகளில் விளையாடும் சந்தர்ப்பம் கிடைக்கக்கூடும். ஆனால், ஒலங்காவின் இன்னொரு முகம் வேறொரு பரிமாணம் கொண்டது. இவர் ஒரு சிறந்த பாடகர். ஒரு பிரபல்ய இசையமைப்பாளருடன் (**Classical music**) தொடர்பு கொண்டுள்ளார். இங்கிலாந்து அவரை அணைத்துக் கொண்டால், ஒன்றில் பந்துடன் அல் லது மைக்குடன் காணலாம். இரண்டிலுமே சிறந்தவர் அவர்.




**SINGING CRICKETER!** - நர்மதா -

# போகுமிடம் வெகு தூரமில்லை

வளைகுடா யுத்தம் ii வெடித்திருக்கும் பிரதேசத்துக்கும், சார்ஜாவுக்கும் வெகுதூரமில்லை. அதேபோல இலங்கை- பாகிஸ்தான் - தென்னாபிரிக்கா மூன்று நாடுகளும் பங்கேற்கவிருக்கும் சார்ஜா கிண்ணப் போட்டிகளுக்கும் வெகுதூரமில்லை. ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஆட்டம் ஆரம்பமாக இருக்கும் இந்நிலையில், விடயமே ஏப்ரல் பூல் ஆகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுவிட்டது. அதுவும் முதலாவது ஆட்டம் இலங்கை - தென்னாபிரிக்கா. இந்நிலையில்தான், தென்னாபிரிக்கா- சார்ஜா செல்வதையிட்டு மீள் பரிசீலனை செய்யவேண்டும் என்று அறிவித்துள்ளது. இதற்குக் காரணம் வளைகுடா யுத்தம். இதேவேளை, பாகிஸ்தான் கிரிக்கெட் அதிகாரிகள் எதுவித சலனமும் இல்லாமல் தாங்கள் சார்ஜா சுற்றுப்போட்டிக்கான ஏற்பாடுகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்து வருவதாகக் கூறியுள்ளார்கள். மற்றும் இலங்கையணி இதுவிடயத்தில் நம்பிக்கையீனமான செய்திகள் ஏதும் வெளியிடவில்லை. ஆனால், தென்னாபிரிக்கா ஏன் இவ்வளவு அவசரப்படுகிறது என்பது புரியவில்லை. தென்னாபிரிக்க வெளிநாட்டு அமைச்சு- வளைகுடாப் பக்கம் போவது ஆபத்தானது என்று எச்சரித்திருப்பதாலேயே தாமும் அது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது என்று கூறும் UCBC - இதுபற்றி அரசாங்கமும், தாங்களும் மந்திராலோசனைகள் செய்துவருவதாகக் கூறியுள்ளது. அடுத்த கட்டமாக UCBC யும், சார்ஜா கிரிக்கெட் ஒருங்கமைப்பாளர் அப்துல் ரெஹ்மான் புக்காதீர் அவர்களும் ஒரு கலந்து ரையாடலில் ஈடுபடவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது.


சார்ஜாவுக்கா புறப்பட்டீங்க?



சார்ஜா பிட்ச் ரொம்பப் பிடிக்கும்

பாலைவனத்தைப் பசுந்தரைக் கிரிக்கெட் தளமாக்கியவர் புக்காதீர். அன்றிலிருந்து இன்றுவரை சார்ஜா செல்லும் கிரிக்கெட் அணிகளை பண மழையால் குளிப்பாட்டியவர் அவர். சார்ஜாக் கிண்ணப் போட்டிகளுக்குச் செல்லாமல்விடுவது அணிகளுக்குப் பெருநட்டம். புக்காதீருக்கு மனவருத்தம். எல்லாம் இன்னும் ஒருவாரத்துக்குள் தெரிந்துவிடும்.

# மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்

அடுத்த ஆரம்பத்தில் அவுஸ்திரேலிய அணி- மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்கின்றது. டெஸ்ட் போட்டிகள் மற்றும் ஒருநாள் போட் டிகள் தொடர்பில் மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லும் அவுஸ்திரேலிய அணியின் தலைவர், அங்கு சில அணி மாற்றங்களைக் காணக்கூடும். உண்மையில் மேற்கிந்தியத்தீவுகள்- 2003 உலகக்கிண்ணத் தோல்விகளின் நினை வுகளை உதறித்தள்ளிவிட்டு, புதியதொரு அணியாக அவுஸ்திரேலியாவைச் சந்திக்கப் போகின்றது. 2001 ஆம் ஆண்டு ஜிம்மி அடம் சிடம் இருந்து அணித்தலைமையைப் பொறுப்பேற்றவர் கார்ல் ஹூப்பர். அணியின் தளர் நிலையைப் போக்க மேற்கிந்தியக் கிரிக்கெட் அதிகாரிகளால் விரும்பி அழைக்கப்பட்டவர் ஹூப்பர். இப்பொழுது அவருக்கு வயது 36. தனது உபாதைகள் மற்றும் வயதைக் கருத்தில்கொண்டு - தான் இனி ஓய்வு பெற்றால் என்னவென்று கார்ல் ஹூப்பர் சிந்திக்கிறார். ஆனாலும், தனது ஓய்வானது அவுஸ்திரேலிய அணியுடனான தொடர்களின் முன்பா, பின்பா என்பதை அவர் இன்னமும் கோடிகாட்டவில்லை. எனினும், கிரிக்கெட் விமர்சகர்களின் கருத்துப்படி- அவுஸ்திரேலிய அணியினை எதிர்கொள்ள, கார்ல் ஹூப்பரின் அனுபவம் மிகவும் அவசியம் என்று எடுத்துக் காட்டப் படுகின்றது.

ஏனெனில், குறுகிய காலத்தில் பல தலைமைகளைக் கண்டும் மேற்கிந்திய அணி பலம் வாய்ந்ததொரு அணியாக வளர்ந்துக் கொள்ளமுடியவில்லை. இந் நிலையில் தான், அவுஸ்திரேலியாவில் சென்று தங்கியிருந்த கார்ல் ஹூப்பரை அழைத்து மேற்கிந்திய அணியைக் கட்டியெழுப்புமாறு கேட்டுக்கொண்டது. உண்மையில் குறிப்பிடத்தக்க அளவிற்கு அவர் மேற்கிந்திய அணியை- ஏனைய அணிகள் கணிக்கும் அளவுக்குக் கட்டியெழுப்பியிருந்தார்.


பெரிய பதவி யாருக்கு?


எனினும், புதிய செய்திகள் ஒரு வாரகாலத்துக்குள்வரக்கூடும். அப்படியாயின் உபதலைவர் ரிட்லி ஜேக்கப்ஸ் அல்லது ராம் நரேஷ் சர்வான் மற்றும் வேவல் ஹைண்ட்ஸ் ஆகியோரின் பெயர்கள் அணித்தலைவர் பதவிக்கு அடிபடுகின்றன. எதற்கும் சில நாட்கள் பொறுத்திருத்தல் அவசியம். இதேவேளை, உலகக்கிண்ணப் போட்டிகளுடன் முடிவடைந்த அணிப்பயிற்றுநர் றொஜர் ஹாப்பரின் பதவிக்கால ஒப்பந்தம் புதுப்பிக்கப்படவுமில்லை. அதேவேளை, புதுப்பிக்குமாறு றொஜர் ஹாப்பர் கேட்கவுமில்லை. எனவே இரண்டு புதுமுகங்களை விரைவில் காணக்கூடும். **-நிர்மலன்.**

# வேண்டுமா வேண்டாமா

உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில், இலங்கையணி அரையிறுதிப் போட்டி யில் வெற்றிபெறத் தவறியதை அடுத்து, அணியின் பயிற்றுவிப்பாளரான டேவ் வட்மோர் அப்பதவியில் இருப்பாரா என்கின்ற நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது.

1996 ஆம் ஆண்டு இலங்கையணி உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்றபோதும் டேவ் வட்மோர் பயிற்றுவிப்பாளராக விளங்கினார்.

இவர் இதற்கு முன்னர் இப்படியொருநிலையை எதிர்நோக்கி இருந்தார். இவரது சேவை போதுமென்று இலங்கைக் கிரிக்கெட்துறை சார்ந்தவர்கள் முடிவுகட்டி, அவரது சேவைக் காலத்துக்கும் முடிவு கண்டார்கள். ஆனால், 1999 உலகக்கிண்ணப் போட்டிகளில் இலங்கை அணி கண்ட மோசமான சரிவு - வட்மோரை நோக்கி இலங்கையை ஓடவைத்தது. அது வீண்போகவில்லை. அணித்தலைமை மாற்றத்தோடு மீண்டும் இலங்கையணியைப் பெயர் சொல்லும்படி ஆக்கித் தந்தவர் டேவ் வட்மோர். இடையில் சரிவுகள், உயர்வுகள் ஏற்படுவது வழக்கம். ஆனால், மீண்டும் இலங்கை அணி என்று அண்ணாந்து பார்க்கவைத்தவர் டேவ் வட்மோர்.


என்ன பேசுகிறார்கள் என்னைப்பற்றி......?

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபைக்கும் - டேவ் வட்மோருக்கும் இடையிலான ஒப்பந்தம் வருகின்ற மே மாதத்தோடு காலாவதியாகவுள்ளது.

டேவ் வட்மோர் செய்தியாளர் மத்தியில் உரையாற்றும்போது- இலங்கை அணி கடந்த காலங்களில் ஈட்டியிருந்த வெற்றி குறித்துத் தாம் மகிழ்ச்சி கொள்வதாகத் தெரிவித்தார்.

டேவ் வட்மோர் இலங்கை அணிக்கு மிகுந்த ஒத்துழைப்பை வழங்கிவந்துள்ளார் என்று அணியின் தலைவர் சனத் ஜெயசூரியா தெரிவித்துள்ளார். தானும், அவரும்

-எவ்.எக்ஸ்.சுதர்ஸன்

# யுத்தநிறுத்த உடன்பாட்டில் ஜனாதிபதி; கோரிக்கை வருமாயின் பரிசீலிப்போம்!

## பொ.ஐ.மு. பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவிப்பு

அரசாங்கத்துக்கும்- விடுதலைப் புலிகளுக்குமிடையில் கைச்சாத்தாகிய யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு ஜனாதிபதியிடம் அங்கீகாரம் பெறும் கோரிக்கை ஒன்று விடுக்கப்படுமானால், பொதுஜன ஐக்கிய முன்னணி அதுபற்றிப் பரிசீலனை செய்யும்.

இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்தார். நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுவரை அரசாங்கமோ, விடுதலைப்புலிகளோ ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ அங்கீகாரத்துக்காக வேண்டுகோளைச் சமர்ப்பிக்கவில்லை.

ஆட்சிக்குவரும் புதிய அரசாங்கத்தை ஏற்றுக்கொள்ள விடுதலைப் புலிகள் தயாராக இல்லை என்று அன்ரன் பாலசிங்கம் விடுத்த அறிக்கை பற்றியும் பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் கண்டனம் தெரிவிப்பதாக அவர் கூறினார்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகாவின் கையொப்பமின்றி நடைமுறைப்படுத்தப்படும் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு அமைவாக நடந்துகொள்வதில் தாம் பல சிக்கல்களை எதிர்நோக்குவதாக வட-கிழக்குப் பகுதிகளில் கடமையாற்றும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் இதனைக் கிளிநொச்சியில் நடந்த கூட்டத்தில் புலிகளுக்குத் தெரிவித்திருந்ததாகவும் புலிகளின் அரசியல் ஆலோசகர் அனரன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுடன் கலந்தாலோசனை செய்துவிட்டு முடிவுகளை எடுக்கவுள்ளதாக அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

# எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட மாட்டாது

## பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர்

(யாழ்ப்பாணம்)

ஈராக்கில் போர் ஏற்பட்டுள்ள போதிலும், இலங்கையில் எரிபொருள் விலைகள் உயர்த்தப்படாது என்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் தகம் விமலசேன தெரிவித்தார்.

ஈராக் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இது குறித்து அவர் கருத்து வெளியிட்டபோதே- ஒருமாத காலத்துக்குத் தேவையான எரிபொருள் கையிருப்பில் இருப்பதாகவும், அதனால் விலைகளை உயர்த்தவேண்டிய அவசியமில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

எரிபொருளைக் கூடியவிலையில் விற்போர் மீது கடும்நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

# வீடு புகுந்து யுவதியுடன் சேஷ்டை 4 இளைஞர் நீதிமன்றில் ஆஜர்!

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமையன்று வீடொன்றினுள் புகுந்து- இளம்பெண்ணுடன் சேஷ்டை புரிந்த நான்கு இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்து, நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். சேஷ்டை புரிந்த ஐந்தாவது நபர் தலைமறைவாகி விட்டார்.

நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட நான்கு இளைஞர்களையும் எச்சரிக்கை செய்த யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா, மேற்படி சம்பவத்துடன் தொடர்புபட்டுத் தலைமறைவாகியுள்ள ஐந்தாவது நபரை 24 மணித்தியாலயத்துக்குள் பிடித்துப் பொலிஸாரிடம் கையளிக்க வேண்டும், மேற்படி சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கோ அல்லது பெற்றோருக்கோ எதுவித அச்சுறுத்தலும் கொடுக்கக்கூடாது, ஒவ்வொரு சனிக்கிழமையும் யாழ். பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட வேண்டும் என்ற மூன்று நிபந்தனைகளின் பின்னர்- தலா ஐயாயிரம் ரூபா காசுப்பிணையிலும், தலா பதினையாயிரம் ரூபா ஆட்பிணையிலும் செல்ல அனுமதித்தார்.

மேற்படி சம்பவத்துடன் தொடர்புபட்டுக் கைது செய்யப்பட்ட இளைஞர்களில் ஒருவர் பல்கலைக்கழக மாணவரென்றும், இன்னுமொருவர் இவ்வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவரென்றும் தெரிவிக்கப்படுகிறது. (லி)

## தனது மகனுக்கு மணம்முடிப்பதாக

# பெண் வீட்டாரிடம் பணம் பெற்று ஏமாற்றிய தாய்!

(யாழ்ப்பாணம்)

ஜேர்மனியிலுள்ள தனது மகனைத் திருமணம் செய்து தருவதாகக் கூறித் தாய் ஒருவர்- பெண் வீட்டாரிடம் மூன்றரை லட்சம் ரூபாவினைச் சீதனமாக வாங்கிவிட்டு, பெண் வீட்டாரை ஏமாற்றிய சம்பவமொன்று உடுவில் பகுதியில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

உடுவில் கற்பகப்பிள்ளையார் கோயிலடியிலுள்ள பெண் ஒருவர், ஜேர்மனியில் தொழில்புரியும் தனது மகனை- அதேபகுதியைச் சேந்த இளம் பெண் ஒருவருக்கு மணம்முடித்துத் தருவதாகக்கூறி, மூன்றரை லட்சம் ரூபாவைச் சீதனமாகப் பெற்றுள்ளார். பெண் வீட்டாரும்- தம் பெண்ணை ஜேர்மனிக்கு அனுப்பியுள்ளனர்.

ஆனால், ஜேர்மனியிலுள்ள அவ்விளைஞன் மேற்படி பெண்ணைத் திருமணம் செய்ய மறுத்துவிட்டார்.

இதனையறிந்த யாழ்ப்பாணத்திலுள்ள பெண் வீட்டார்- தாம் கொடுத்த சீதனத்தைப் பெற்றுத்தருமாறுகோரி - யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். இவ்வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. மூன்றரை லட்சம் ரூபாவினைச் சீதனமாக வாங்கிய அத்தாயாரை - 25 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இருவரின் ஆட்பிணையிலும் செல்வதற்கு யாழ். நீதிவான் விக்னராஜா அனுமதித்தார்.

இப்பெண்மணியை - யாழ். நீதிமன்றின் அனுமதியில்லாமல் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு அனுமதிக்கவேண்டாமெனக் கட்டுநாயக்கவிலுள்ள குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு யாழ். நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வழக்கின் மீதான விசாரணை மீண்டும் அடுத்த மாதம் மூன்றாம் திகதி எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (லி)

### நடுவர்களுக்கான வழிகாட்டல் வகுப்பு

இலங்கை மெய்வல்லுநர் சங்கதரம் 4 மெய்வன்மை நடுவர்களுக்கான போட்டிப்பரீட்சை வழிகாட்டல் வகுப்பு ஏப்ரல்மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இவ்வழிகாட்டல் வகுப்பில் இலஙகை மெய்வல்லுநர் சங்கப் பயிற்சிக்குழுத்தலைவர் பீ.எஸ்.ரி. வைத்தியதிலக, கே.தெய்வேந்திரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (78)

### அனுமதியின்றி மதுபானம் விற்றவருக்கு அபராதம்

(சிறுப்பிட்டி)

அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் விற்ற அளவெட்டி மத்தியைச் சேர்ந்த ஒருவர்- மதுவரித்திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டு, மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவ்வழக்கை விசாரணை செய்த நீதிவான்- குற்றவாளிக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன், 61 போத்தல் உயர்ந்தரகச் சாராய வகைகள், 14 வெளிநாட்டு பியர் வகைகள் என்பவற்றை அரசு உரிமையாக்கவும் கட்டளையிட்டார். (78)

## படங்களும் செய்திகளும்



யாழ்.நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயத்தில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினர் மகாதேவன் மங்கள விளக்கேற்றுவதை படத்தில் காணலாம்.



யாழ். சுதுமலை சின்மய பாரதி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றபோது, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இனுவில் இந்துக் கல்லூரி அதிபர் குபேரநாதன் போட்டியை ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம்.



அகவை அறுபது கண்ட "செம்பியன் செல்வன்" ஆ.இராஜகோபாலுக்கு கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் சார்பில் ஜோசப் பாலா "இலக்கிய வித்தகர்" என்னும் பட்டம் அளித்து கௌரவிக்கிறார்.

## மந்திகை மருத்துவமனையில் எம்.எஸ்.எவ் சாதனை

# மதில் விழுந்து முறிந்த இளைஞரின் கால் இரு வருடங்களின் பின் பொருத்தப்பட்டது

இருவருடங்களுக்கு மேலாகக் கால் முறிந்தநிலையிலிருந்த இளைஞர் ஒருவருக்குச் சத்திரசிகிச்சை மூலம் - முறிந்த காலை இணைப்பதில் வெற்றிகண்டார் மந்திகை மருத்துவ மனையில் பணியாற்றும் எம்.எஸ.எவ். மருத்துவர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது- ஜெயரட்ணம் சிறிகாந்தன் (வயது 19) என்ற புத்தூர் மேற்கு-நவக்கிரியைச் சேர்ந்த இளைஞனுக்கு, மதில் இடிந்து வீழ்ந்ததில்- 2000 ஆம் ஆண்டு வலது முழங்காலுக்குக் கீழ் முறிவு ஏற்பட்டது.

உடனடியாகவே யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர், அங்கு 6 மாதங்களுக்கு மேலாகச் சிகிச்சை பெற்றும் உடைந்தகாலை இணைக்க முடியாதநிலையில் கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு எவ்வித சிகிச்சையும் அளிக்கப்படவில்லை. சந்தேகத்தின் பேரில் இவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் அடிக்கடி வைத்தியசாலையில் வைத்தே விசாரணைகளுக்குட்படுத்தப்பட்டார். எழுந்து நடக்க இவருக்கு ஒருவரின் துணை தேவையாகயிருந்தது.

அத்துடன், கொழும்பில் சிகிச்சையின்றிக் காலங்கடத்தப்பட்டதால் தொடர்ந்து சிகிச்சைபெற இவரின் குடும்பநிலைமை இடம் கொடுக்கவில்லை. இதனால் கொழும்பில் சிகிச்சை பெறாமலே இவர் வீடு திரும்பினார். வீட்டில் ஒருவருடத்துக்கு மேலாக முறிந்த காலுடனேயே காலங்கடத்தி வந்தார்.

இந்நிலையில்- கடந்த தை மாதம் 29 ஆம் திகதி மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக இவர் சேர்க்கப்பட்டார். இவரைப் பரிசோதித்த பிரான்ஸ் நாட்டு மருத்துவக்குழு சத்திரசிகிச்சை நிபுணர் அபில்கார் இவருக்கான சத்திரசிகிச்சைகளைச் செய்ய முன்வந்தார்.

தொடர்ந்து ஜனவரி 30 ஆம் திகதி இவருக்கான சத்திரசிகிச்சையை- சத்திரசிகிச்சை நிபுணர் மேற்கொண்டார். பலமணி நேரப் போராட்டத்தின் பின்னர் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. இப்போது அந்த இளைஞன் எழுந்து நடமாடுகின்றார். அத்துடன், மாலை வேளைகளில் சத்திரசிகிச்சை நிபுணரே - இளைஞனுக்கு சைக்கிள் ஓடுவதற்கான பயிற்சியையும் அளித்து வருகின்றார்.

# யாழ். நூலகத்தைத் திறக்க நடவடிக்கை எடுக்க முடிவு!

புனரமைக்கப்பட்ட யாழ்.பொதுநூலகத்தைத் திறப்பது மற்றும் பொது நூலகத்தை திறந்து மக்களின் பாவனைக்கு அனுமதிப்பது தொடர்பான கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை யாழ்.மாநகரசபையின் சுண்டுக்குளி நூல்நிலையத்தில் நடைபெற்றது.

யாழ்.மாநகரசபையின் செயலாளர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில், நூலகத்தை வெகுவிரைவில் எப்படியேனும் திறந்தே தீர வேண்டும். நூலகம் திறப்புத் தொடர்பாகச் சகலதரப்பினருடனும் கலந்தா லோசிக்கப்படவேண்டும். இந்நூலகத்திறப்பு விழாவுக்குப் பொறுப்பாகப் பேராசிரியர் சண்முகதாஸே இருப்பார் என்றும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

இக்கலந்துரையாடலில் கல்விச் சமூகத்தினர் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (சு)

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு
இன்னா எனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கண் செயல்.
- *திருக்குறள்.*

# நமது நோக்கு

## அமைதிக்கு நடுவே ஒரு ஊடகப் போர்!

அரசாங்கம் போரை நிறுத்தி சமாதான வழிமுறைகளில் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ள ஆர்வம் காட்டினாலும் - கொழும்பிலிருந்து வெளிவரும் சில ஆங்கில, சிங்கள ஊடகங்கள் - அமைதி முயற்சிகளைத் தவிர்த்து, ஒரு போரை நடத்துமாப்போலவே செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

செய்திகளை - நடுநிலைத் தன்மையுடன் அனுகுவதைவிட்டு - பதற்றத்தையும், இனவிரோதத்தையும் தூண்டுவதாக இவை வெளியிட்டுவரும் செய்திகள் - அமைதியை விரும்பாத சக்திகளுக்கு, தீனி போட்டாற்போல ஆகிவருவதைக் காணமுடிகின்றது.

குறிப்பாக - போர்நிறுத்தத்தைப் பாதிக்கக்கூடியதாக அல்லது சற்றே சிக்கலைத் தருவதான சம்பவங்கள் நடக்கும்போது - எவ்விதமான நியாயமுமற்று - அப்பட்டமான இனவாதப் போக்கில் உண்மையான தகவல்களை இந்த ஊடகங்கள், தமக்கேற்றாற்போல திரிவுபடுத்தி வருகின்றன.

அண்மையில் - கடற்பகுதிகளில் நடைபெற்ற இரண்டு சம்பவங்களை இந்த ஊடகங்கள் தந்தவிதம் - இவற்றின் நோக்கத்தினை தோலுரித்துக் காட்டுவதாக அமைந்தது.

கிழக்கு ஆழ்கடற்பரப்பில், சர்வதேசக் கடலில் - விடுதலைப் புலிகளின் சரக்குக்கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தை - ஐலண்ட், சண்டே ரைம்ஸ் போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளும், திவயின, லங்காதீப போன்ற சிங்களப் பத்திரிகைகளும் வெளியிட்டதை நோக்கும் எவரும் -

விடுதலைப் புலிகள் அடாவடித்தனமாக போர்நிறுத்தத்தை மீறியதாகவும், கடற்படையோ - இலங்கையின் இறையாண்மையை, சுயாதிபத்தியத்தை சர்வதேச கடல்வரை காத்து வெற்றிவாகை சூடியதாகவும் - அந்தச் சம்பவத்தை உள்வாங்கிக் கொள்வர்.

இதுபோன்றே - முல்லைத்தீவுக்கப்பால் சீனநாட்டு மீன்பிடி ட்ரோலர் படகொன்று நேற்றுமுன்தினம் மூழ்கடிக்கப்பட்டபோது - அப்படகிலிருந்தோராலேயே - தாக்கியவர்கள் இனங்காணப்பட முடியாத நிலையிலும் - அதனைச் செய்தது புலிகளே என முத்திரைகுத்த ஐலண்டும், திவயினவும் பெருமுயற்சி எடுத்திருக்கின்றன.

இவ்வாறான சம்பவங்களோடு - அமைதிப் பேச்சுக்களிலும் இவற்றின் கைவரிசை எல்லைமீறியே செல்லுகின்றது.

வெளிநாட்டு நிதியுதவி பற்றியும், பேச்சுக்களில் இணக்கம் காணப்படும் விடயங்கள் தொடர்பாகவும் - உண்மைக்கு மாறான செய்திகளை சிங்கள மக்களுக்குக் கொடுப்பதில், இவை காட்டுகின்ற தீவிரம் - ஒப்பீட்டு ஆராயும் எவருக்குமே - இந்த ஊடகங்களின் போக்குப் பற்றிய அச்சத்தை ஏற்படுத்தவே செய்யும்.

வெளிநாட்டு உதவிகள் வடக்கு - கிழக்கிற்கு மட்டுமே பாரியளவில் கொட்டப்படுவதாகவும் - இந்த நிதியைக் கொண்டு, விடுதலைப் புலிகள் தனிநாட்டுக்கான கட்டுமானத்தை உருவாக்கி வருவதாகவும் இவை விடும் கதைகள் பொதுஜன ஐக்கிய முன்னணியினதும், ஜே.வி.பியினதும் அமைதி எதிர்ப்பு முயற்சிகளுக்குச் சளைத்தவையல்ல.

அதேபோன்று - பேச்சுக்களில் இணக்கம் காணப்படும், ஆராயப்படும் எத்தனையோ விடயங்கள் இருக்க - எங்கு தமிழர் தரப்பின் நியாயமான கோரிக்கைகள் ஏற்கப்படுகின்றதோ, அதனை முதன்மைப்படுத்தி பிரதான தலையங்கம் தந்து - 'கொடுத்தாயிற்று - தமிழர்களுக்கு எல்லாமே' என்ற மறைமுகமான செய்தியைக் காவிச் செல்வதும் - இந்த ஊடகங்களின் தந்திரோபாயங்களில் குறிப்பிடத்தக்கதொன்று.

இதேவேளை - தற்போதைய அமைதி முயற்சிகளை எதிர்க்கும், விடுதலைப் புலிகளை விமர்சிக்கும் அரசியல் சக்திகளுக்கு, அவற்றின் கருத்துக்களுக்கு முதலிடம் கொடுத்து முக்கியத்துவம் கொடுப்பதும் இவற்றில் காணப்படும் ஒரு பொதுப் பண்பாக இருக்கிறது.

குறிப்பாக - பௌத்த சிங்களப் பேரினவாதத்திற்காகக் குரல் கொடுக்கும் அமைப்புக்கள் - சில இன்றுவரை சிங்கள மக்களுக்கே தெரிந்திராத புதிய அமைப்புக்களாக இருந்தாலும் - அவற்றிற்கு தளம் அமைத்து, அவற்றின் இனவாதக் கருத்துக்கள் - சிங்கள மக்களிடம் சென்றடைய வேண்டுமென இந்த ஊடகங்கள் காட்டும் ஆர்வம் வியப்பைத் தருகின்றது.

இந்தவகையில் - தெற்கிலிருந்து ஒரு யுத்தத்தை முன்னெடுத்துவரும் இந்த ஊடகங்கள் - அமைதிக்கு எதிரான வலுமிகுந்த அச்சுறுத்தலாக - கட்டம் கட்டமாக விஸ்வரூபம் எடுத்துவருவது கவனத்துக்குரியதாகவே மாறிவருகிறது.

## பருத்தித்துறை கூட்டுறவுச் சங்கக் களஞ்சியத்தில் செயலகத்தின் பழுதடைந்த அரிசியால் கூட்டுறவுச் சங்கப் பொருட்களும் பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச செயலகத்தினால் பருத்தித்துறைப் ப.நோ.கூட்டுறவுச்சங்கக் களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டிருந்த அரிசி- உரியகாலத்தில் விநியோகிக்கப்படாததால் முழுமையாகப் பழுதடைந்திருப்பதாகத் தெரியவருகின்றது.

கடந்தவருடம் ஒக்ரோபர் மாதம் கோமாரிக் கப்பலில் எடுத்துவரப்பட்ட அரிசியில் ஒருபகுதி பருத்தித்துறைக் கூட்டுறவுச்சங்கக் களஞ்சியத்தில் அரச செயலகத்தால் சேமிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு சேமிக்கப்பட்ட 15 லொறி லோட் அரிசி இதுவரை அங்கிருந்து அகற்றப்படவில்லை.

இந்த அரிசி முற்றாகப் பழுதடைந்துள்ளதுடன், அரிசி மூடைகளில் இருந்து புழுக்கழும், வண்டுகளும் பெருகி வருகின்றன. இதனால், மேற்படி களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த கூட்டுறவுச்சங்கத்திற்குச் சொந்தமான பெருமளவு பொருட்களும் வண்டுகள், புழுக்களினால் பாதிக்கப்பட்டு வருவதாகப் பருத்தித்துறைக் கூட்டுறவுச்சங்கத் தலைவர் என்.சிவஞானசுந்தரம் தெரிவித்தார்.

மேற்படி அரிசி பழுதடைவதற்கு முன்னர் - யாழ். செயலக அதிகாரிகள் களஞ்சியத்தை வந்து பார்வையிட்டபோதும் - அரிசியை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ். விஞ்ஞான சங்க வினா விடைப் போட்டி

தமிழ் மாணவர்களின் விஞ்ஞான அறிவினை மேம்படுத்தும் நோக்குடன், யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடாத்தும் வினா விடைப் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ள புவியியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி நடைபெற்ற அரையிறுதிச் சுற்றில்- கிளி/முருகானந்தா மகா வித்தியாலயம்- முரசுமோட்டை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் பெண்கள் உயர்தரப் பாடசாலை, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் என்பன வெற்றிபெற்றுள்ளன.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடாத்திய பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, விஞ்ஞானக் கண்காட்சிப் போட்டி, மற்றும் வினாவிடைப் போட்டி ஆகியனவற்றில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பரிசுகளும் யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஆண்டமர்வின்போது - ஏப்ரல் 4 ஆம் திகதி 2 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற விரும்புவோர்- யாழ்ப்பாண விஞ்ஞான சங்க உதவிச்செயலாளர் பேராசிரியர் நா.ஞானகுமாரனுடன் தொடர்புகொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் ஆட்சேர்ப்பு; புதிதாக இனி இல்லை!

### கல்வி அமைச்சு தீர்மானம்

புதிதாக ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதில்லை என்று கல்வி அமைச்சுத் தீர்மானித்திருக்கின்றது. வருடாந்தம பாடசாலைகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைவதையடுத்தே கல்வி அமைச்சு இந்த முடிவை எடுத்துள்ளது.

வருடாந்தம் பாடசாலைகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்தால் குறைவடைந்து வருவதாகக் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை- நகர்ப்புறப் பாடசாலைகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தபோதிலும், கிராமப்புறப் பாடசாலைகளில்தான் ஆசிரியர் பற்றாக்குறை தீவிரமாக இருப்பதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆசிரியர்கள் நகரப்புறப் பாடசாலைகளுக்கு இடமாற்றத்தைப் பெறுவதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. தமிழ் மொழி மூல ஆசிரியர்கள் 5,400 பேருக்கும், நுண்கலைப்பாடங்களைப் போதிக்கும் 500 ஆசிரியர்களுக்கும் தற்போது வெற்றிடங்கள் உள்ளதாகவும் கல்வி அமைச்சு ஏற்றுக்கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## அரசசார்பற்ற நிறுவனங்களுடன் மனித உரிமை பற்றி சந்திப்பு

### மனித உரிமை ஆணைக்குழு நடத்தும்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களிற்கிடையே ஆலோசனைக்கூட்டம் ஒன்றை நடாத்துவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் உயரதிகாரிகள் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

இந்த ஆலோசனைக் கருத்தரங்கு நாளை மறுதினம் காலை 10 மணிக்கு வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் நடைபெறும்.

இக்கருத்தரங்கில் - மனித உரிமைகள் பாதுகாப்பில் அரசசார்பற்ற நிறுவனங்களின் பங்கு, பிராந்திய மட்டத்தில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்களின் வலையமைப்பின் மூலம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இலக்குகளை எட்டக்கூடிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் போன்ற பல்வேறு திட்டங்கள் பற்றி கலந்தாராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

(ரா)

### கொழும்புத்துறையில்

## தண்ணீர் தாங்கியமைக்க யூ.என்.எச்.சீ.ஆர். உதவும்!

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பிரதேசத்தில் யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நான்கு செயற்திட்டங்களை மேற்கொள்வதற்கு யாழ். பிரதேசசெயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம்- கொழும்புத்துறைப் பகுதியில் தண்ணீர் தாங்கி அமைப்பதற்கு 19 லட்சத்து 13 ஆயிரத்து 775 ரூபாவினையும், கொழும்புத்துறையில் மீளக்குடியமர்ந்த முப்பது கடற்தொழிலாளர்களுக்குப் 10 ஆயிரம் ரூபா வீதம் சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் வழங்குவதற்கு 3 இலட்சம் ரூபாவினையும், கொழும்புத்துறை மாதர் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தின் புனரமைப்பு வேலைகளுக்கு 3 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாவினையும், கொழும்புத்துறைப் பிரதேசத்தில் உள்ள வேலையற்ற இருபது பெண்களுக்குப் 10 ஆயிரம் ரூபா வீதம் சுயதொழில் ஊக்குவிப்பு கடன் வழங்குவதற்கு 2 இலட்சம் ரூபாவினையும் யூ.என்.எச்.சி.ஆர் வழங்கியுள்ளது.

இச் செயற்திட்டத்தின் கீழான வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(லி)

## கல்வியியற் கல்லூரி நடாத்திய அழகெழல் போட்டி முழவுகள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி நுண்கலை மன்றத்தினால் கடந்த 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட அழகியற்துறைசார் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

*சித்திரக்கலைப்போட்டி*

பிரிவு - A தரம் (4,5)

1 ஆம் இடம் - பா.சங்கீதா - அத்தியார் இந்துக் கல்லூரி, 2 ஆம் இடம் - பா.புஷ்பகாந்தன் - மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம், 3 ஆம் இடம் - க.ஸ்ரான்லி போல் - திருநெல்வேலி ஆர்.சி.டி.எம்.எஸ், எஸ்.ஸ்ரீநாத் - பரி.யோவான் கல்லூரி.

பிரிவு - B (6,7,8)

1 ஆம் இடம் - இ.பிரதீசன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 2 ஆம் இடம் - சி.கிருஷாந் - அல்லாரை அ.த.க. பாடசாலை, 3 ஆம் இடம் - க.ராம் - ஹாட்லி கல்லூரி.

பிரிவு - C (9,10)

1 ஆம் இடம் - யே.மொறின் கொன்செப்ரா - திருக்குடும்பக் கன்னியர் மடம், 2 ஆம் இடம் - பே.லூசியா வஜனோத்தா - இந்து மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம்- வி.ஸ்ரீவித்தகன் - இந்துக் கல்லூரி, அ.கார்த்திக் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

பிரிவு -D தரம் (11,12,13)

1 ஆம் இடம் - ச.மயூரதன் - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, 2 ஆம் இடம் - க.தனஞ்சயன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, 3 ஆம் இடம் - து.தஜேந்திரன் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.

*நடனப் போட்டிகள்*

1 ஆம் இடம் - பா.கீர்த்தனா - பெரியபுலம் மகா வித்தியாலயம், 2 ஆம் இடம் - செ.ஆரணி - உடுவில் மகளிர் கல்லூரி, 3 ஆம் இடம் - கு.பிரியா - மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம், கா.சுரோஜி - சென். ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை.

*சிறுவர் நாடகம்*

யாழ்.மாவட்டத்தின் ஐந்து வலயங்களிலிருந்து விண்ணப்பித்த நாடகங்கள் 22 ஆகும். இதில் 18 பாடசாலைகள் தோற்றியிருந்தன.

1 ஆம் இடம் - அருணோதயக் கல்லூரி, அளவெட்டி.

2 ஆம் இடம் - மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.

3 ஆம் இடம் - நல்லூர் சென். பெனடிற் றோ.க.த.க. பாடசாலை.

*இசை*

பிரிவு - தரம் (4,5)

1 ஆம் இடம் - யு-ஸ்ரீஜெனனி - உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.

2 ஆம் இடம் - எச்.ரவிகரன் - சித்தங்கேணி கணேசா வித்தியாலயம்.

3 ஆம் இடம் - ம.அலன் கிரசி - கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம்.

பரிசளிப்பு விழா பற்றிய திகதி பின்னர் அறியத்தரப்படும் எனக் கல்வியியற் கல்லூரி அறிவித்துள்ளது.

# ஐ.தே.கவை நோக்கி நீளும் சந்திரிகாவின் அதிகாரங்கள்

**தெற்குத் திசையினிலே**
**கொழும்பிலிருந்து இந்திரஜித்**

சமாதான முன்னெடுப்புப் பேச்சுவார்த்தையின் 6 ஆம் கட்டம் முடிவுற்றுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்கும் இடையில் புரிந்துணர்வுகள் - முறுகல்களுக்கு மத்தியில் பேச்சுக்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

நாளுக்குநாள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக தென்னிலங்கைக் கட்சிகள் குறிப்பாக - சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், மக்கள் விடுதலை முன்னணியும் தெரிவித்துவரும் குற்றச்சாட்டுக்களின் தீவிரத்தன்மை தென்னிலங்கை மக்கள் மத்தியில் அதிகரித்து வருகிறது. ஏ-9 வீதியில் பயணிக்கும் தென்னிலங்கைச் சிங்களவர்கள் -



சோதனை, அசௌகரியங்களுக்கு உட்படுவதில்லை என்ற ஒரு அம்சமே சாதாரணமாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குச் சாதகமான நிலைப்பாட்டைச் சிங்களவர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது. பயங்கரவாதிகளாகச் சிங்கள அரசாங்கத்தினால் தென்னிலங்கை மக்கள் மத்தியில் காட்டப்பட்டு வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தற்சமயம் LTTE எனச் சாதாரண மக்களாலும் அழைக்கப்படுகின்றனர்.

இதுவும் உண்மையில் போர் நிறுத்த உடன்பாட்டின்மூலம் கிடைத்த அனுகூலம் என்றே சொல்லலாம். தென்னிலங்கை மக்களின் மாற்றம், அரசியல்வாதிகளைப் பொறுத்தவரையில் வாக்கு வேட்டையின் அடிப்படையில் சிந்திக்க வைக்கும் நிலையிலுள்ள அதே தென்னிலங்கையின் சில ஊடகங்கள் - இன்னமும் இனவாதப்போக்கில் தமது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. ஊடக முறைமைக்கு அப்பாற்பட்டு எந்தவொரு சம்பவத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்தி செய்தி வெளியிடுவதில் இவை ஈடுபட்டு வருகின்றன.

குறிப்பாக, வடக்கு - கிழக்கில் ஏதாவது சம்பவம் ஒன்று நிகழ்ந்தால் அதனை நடுநிலைமையிலிருந்து பார்க்காமல், உடனடியாகவே தமிழீழ விடுதலைப் புலிகளைக் குற்றம் சுமத்தி அவர்களே அதனைச் செய்தனர் என்ற தொனியில் செய்திகள் வெளியிடப்படுகின்றன. இது இலங்கையின் இனப்பிரச்சினை முறுகல் தொடர்பில் சிங்கள மக்களுக்கும் - தமிழ் மக்களுக்கும் இடையில் தொடர்ந்து கசப்புணர்வுகளை நிலைபெற வைக்கும் செயலாகவும் வளர்ந்து வருகிறது.

இவ்வாறான சூழ்நிலையிலும் இன்று இனப்பிரச்சினைத்தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளுக்குச் சிங்களமக்கள் மத்தியில் ஆதரவு தொடர்வது போர்நிறுத்த உடன்பாட்டினாலேயாகும். அத்துடன் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தீர்வு தொடர்பான அக்கறையும் இதற்குக் காரணமாகும்.

மேல்மாகாணசபை ஆட்சியைத் தம்வசம் கொண்டிருக்கும், பொதுஜன ஐக்கியமுன்னணி- மக்கள் விடுதலைமுன்னணி நிர்வாகம், கோட்டே மாநகரசபை ஆட்சியைக் கலைத்துள்ளது. இது ஊழல்களைச் சுட்டிக்காட்டி உரிய நிலைப்பாட்டின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாக இருந்தாலும், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிராக, ஜனாதிபதியின் பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொண்ட அதிரடிச் செயல் எனக் கொள்ளப்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் முல்லைத்தீவுக்கு 220 கடல் மைல் தொலைவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பலைத் தாக்குவதற்கு உத்தரவிட்டமை ஜனாதிபதியே என்ற செய்தி - ஐக்கிய தேசியக் கட்சி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முதலாவது பரீட்சிப்பாகும். ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரங்கள் இன்னமும் செயலிழந்துவிடவில்லை என்பதைக் காட்டுவதற்காகவே இந்தக் கப்பலைத் தாக்குவதற்கு உத்தரவிட்டார் எனப் பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கியஸ்தர்கள் கூறிவருகின்றனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகம், பொதுஜன ஐக்கிய முன்னணியின் இந்தப் பிரசாரத்தை முறியடிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தனது இல்லத்தில் அரசசார்பு ஊடகங்களை அழைத்துக் கலந்தாலோசனை நடத்தினார். இதற்கிடையில் பிரதமரும் - ஜி.எல்.பீரிஸுடன் தொடர்புகொண்டு ஆலோசனைகளை வழங்கிக்கொண்டிருந்தார். இதன்போது அழைக்கப்பட்டிருந்த ஊடகவியலாளர்களுக்கு சமாதானத்தின் நிலைப்பாடுகள் புரிய வைக்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பலைத் தாக்குவதற்குக் கடற்படைக்கு உத்தரவு இட்டமை ஜனாதிபதிதான் என்ற கருத்து அமைச்சினால் தெரிவிக்கப்பட்டது. இதனை ஊடகங்களில் தீவிரமாகப் பிரசாரம் செய்யவேண்டும் எனவும் அங்கு அமைச்சரால் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இந்த ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றதன் பின்னர் அமைச்சர் ஜி.எல்.பீரிஸே அங்கு பிரசாரத்தை ஆரம்பித்து வைத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பலைக் கடற்படையினர் தாக்கி அழித்தது சரியானது என அவர் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் முதன் முதலாகத் தெரிவித்தார். கடற்படையினர் - இலங்கையின் இறைமையாண்மையைக் காப்பதற்காகவே தமிழீழ விடுதலைப் புலிகளின் கப்பலைத் தாக்கியதாக அவர் குறிப்பிட்டார். இலங்கைக் கடற்படையினருக்கு, சர்வதேச கடற்பரப்பிலும் செயற்பட உரிமையுண்டு என்ற வாதத்தையும் அவர் முன்வைத்தார். சம்பந்தப்பட்ட கப்பல் தாக்கியழிக்கப்பட்ட நேரத்தில் கடற்படையினர் தாமே முடிவெடுக்க முடியும் என்பதால், அதற்கான உத்தரவை ஜனாதிபதியிடமிருந்து பெறத்தேவையில்லை. இந்தநிலையில், கடற்படையினர் - பாதுகாப்பு அமைச்சருடன் தொடர்பு கொண்டதாகவும் அமைச்சர் கருத்துரைத்தார்.


இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினரின் அறிக்கையை அடுத்து யார் அந்த உத்தரவுக்குரியவர்? என்ற கருத்துக்கள் மறைந்து, எதிர்காலத்தில் இந்த மாதிரியான சம்பவங்கள் இடம்பெறக்கூடாது என்ற நிலைப்பாடு அனைத்துத்தரப்பு மத்தியிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான முதலாவது நடவடிக்கை முடிவடைந்த நிலையில், இரண்டாவது நடவடிக்கையாகவே கோட்டே மாநகரசபை கலைக்கப்பட்டுள்ளது. இது, இதுவரை பாரிய தாக்கங்களை ஏற்படுத்தாதபோதும், ஐக்கிய தேசியக்கட்சியின் கோட்டே ஆசன அமைப்பாளர் அமைச்சர் ரவி கருணாநாயக்க, மாநகரசபை ஆட்சிக் கலைப்புக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைக்கு ஏற்பாடுகளைச் செய்து வருகின்றார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அந்த முன்னெடுப்புக்கள் எந்தளவு ஐக்கிய தேசியக்கட்சிக்கு வாய்ப்பாக அமையப்போகிறது என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயமாகும்.

இது இவ்வாறிருக்க, ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் நீண்டுசெல்லும் நிலைப்பாடே தற்சமயம் காணப்படுகிறது.

இதனடிப்படையில் வெகுவிரைவில் மினுவாங்கொடப் பிரதேச சபையில் ஏதாவது மாற்றம் ஒன்று நிகழும் என எதிர்பார்க்கப்படுகிறது. அச்சபையில் காணப்படும் குறைபாடுகள் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. அவற்றை நிவர்த்திக்கும் வகையில் தலைவர் பதவியில் மாற்றங்கள் கொண்டுவரப்படலாம்



என்ற கருத்தே தற்சமயம் நிலவி வருகிறது. இந்த உள்ளூராட்சி அமைப்பும், மக்கள் விடுதலை முன்னணி மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி கூட்டுக் குழுவினால் இயக்கப்படும் மேல்மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து, ஜனாதிபதியின் அடுத்தகட்ட நகர்வு, இரண்டு அரசாங்க ஊடகங்களைத் தம்வசப்படுத்தும் நடவடிக்கையாகும் எனத் தகவல்கள் கசிந்துள்ளன. தாம் மாற்று அரசாங்கம் அல்லது பொதுத் தேர்தல் ஒன்றுக்குச் செல்ல வேண்டுமானால், அதற்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சும் - தகவல்துறை அமைச்சும் ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என ஜனாதிபதியின் ஆலோசகர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்திருந்தமை இங்கு நினைவூட்டத்தக்கது.

பாதுகாப்பு அமைச்சும், தகவல் துறை அமைச்சும் - பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜனாதிபதிக்கும் பாரிய அச்சுறுத்தல்களை விடுத்துவருவதாக முன்னர் பல தடவைகளாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன. இதனடிப்படையிலேயே, இந்த இரண்டு அமைச்சுக்களையும் - தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி தம்வசப்படுத்துவார் எனப் பொதுஜன ஐக்கிய முன்னணி தெரிவித்துவருகிறது. அதன் ஒரு கட்டமாகவே விரைவில் இரண்டு ஊடகங்கள் அவரால் பொறுப்பேற்கப்படப்போவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இவ்வாறான ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முன்னெடுக்கப் போகும் நடவடிக்கைகள் எவை? என்பது - மக்கள் மத்தியில் அது வைத்துக் கொள்ளும் நம்பிக்கையிலேயே தங்கியுள்ளது எனலாம். ஜனாதிபதியின் ஒவ்வொரு நகர்வுகளும் ஆரம்பத்தில் இருந்தே, ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவருவதிலேயே குறியாக இருந்துவருகின்றது. எனினும், அதற்கு இரண்டு பெரும் தடைகள் அவருக்கு எதிர்ப்பட்டன.

ஒன்று, மக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு அங்கீகாரம் வழங்கி அதிக காலம் கடந்திராமை. இரண்டு, ரணிலின் ஆட்சிக்குச் சர்வதேச நாடுகளின் ஆதரவு கிடைத்துள்ளமை என்பனவாகும். மறுபுறத்தில் ஜனாதிபதிக்கு - சர்வதேச ஆதரவு என்ற வகையில் அயல்நாடான இந்தியாவின் ஆதரவு முழுமையாகவே இருந்து வருவதாகக் கூறப்படுகின்றது. இந்திய ஆதரவு - ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக்கு இல்லை எனக் கூறுவதற்கும் முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா கடைப்பிடித்துவரும் கொள்கைகள் - இந்தியாவைப் பெரிதும் கவர்ந்துள்ளன. அதேபோல், முன்னர் 1987 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இந்திய உற்பத்திகள்கூட இலங்கைக்கு வரக்கூடாது என எச்சரிக்கை விடுத்திருந்த மக்கள் விடுதலை முன்னணியும் இன்று இந்திய ஆதரவை நாடிநிற்கிறது. மேற்குலக நாடுகளை அந்த முன்னணி கண்டித்து எதிர்ப்புகளை தெரிவிக்கின்றபோதிலும், இந்திய எதிர்ப்பை அது வெளியிடுவதில்லை.

இவ்வாறான போக்குகளின் மத்தியில், ஜனாதிபதியின் கட்சி - மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து மாற்று அரசாங்கம் ஒன்றை அமைப்பதில் முனைப்புக்காட்டி வருகின்றது. ஏற்கனவே ஏப்ரல் முதல்வாரம் என வரையறுக்கப்பட்டிருந்த இந்த மாற்றம், தற்சமயம் காலதாமதமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியும், மக்கள் விடுதலை முன்னணியும் - முதலில் மாற்று அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தி, பின்னர் நாடாளுமன்றத்தைக் கலைப்பது என்ற அடிப்படையிலேயே திட்டங்களை வகுத்துள்ளன. உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்தால் மற்றுமொரு தேர்தல் நடத்தப்படும் என்ற அடிப்படையிலேயே திட்டங்களை இவை வகுத்துள்ளன. உடனடியாக நாடாளுமன்றத்தை கலைத்தால் மற்றுமொரு தேர்தல் நடத்தப்படும்வரை ஐக்கிய தேசியக்கட்சியே காபந்து அரசாங்கத்தை முன்னெடுக்கும் சந்தர்ப்பம் ஏற்படும். அது, அந்தக் கட்சியின் தேர்தல் பிரசாரத்திற்கு வாய்ப்பை வழங்கிவிடும் என இந்த இரண்டு கடசியினரும் எண்ணுகின்றன. இதன காரணமாகவே முதலில் மாற்று அரசாங்கம், பின்னர் நாடாளுமன்றக் கலைப்பு என்ற நிலைப்பாட்டை இந்தக் கட்சிகள் முன்னெடுத்துள்ளன.

ஜனாதிபதியும், அவரின் கட்சியினரும், மக்கள் விடுதலை முன்னணியினரும் விரைவில் ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்தியே தீரவேண்டும் என்ற உறுதிப்பாட்டைக் கொண்டுள்ளதாகவே தகவல்கள் வெளிவந்துள்ளன. எனினும், இந்த முனைப்புகளுக்கு எதிராக ஐக்கிய தேசியக்கட்சி என்ன நடவடிக்கைகளை முன்னெடுக்கப்போகிறது என்பதிலேதான் அந்தக் கட்சியின் ஆட்சி தக்கவைக்கப்படும்நிலை காணப்படுகிறது.

இதற்காக அந்தக்கட்சியும் பல முன்னெடுப்புக்களை எடுத்து வருகிறது. பாதுகாப்புப் படையினரின் ஆதரவை உடனடியாக இழந்துவிட முடியாதநிலையில், அவர்களைத் திருப்திப்படுத்தும் செயற்பாடுகளை ஐக்கிய தேசியக்கட்சி முன்னெடுக்கிறது.

இதிலொன்றுதான் - கொழும்புக்குவரும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பாதுகாப்புக்கு, கொமாண்டோ படைகளுக்குப் பதிலாக அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் கண்காணிப்பில் மாற்றுப் படைகளைப் பயன்படுத்துவது என்பது அண்மைய நிலைப்பாடாகும். கொமாண்டோ படை - தமிழீழ விடுதலைப்புலிகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் காட்டிய பின்னடிப்பு இதற்கான காரணமாகும்.

அதேநேரம், எந்தவொரு காரணத்தை முன்வைத்தும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு மீண்டும் ஒரு போர் முன்னெடுப்புக்கு வாய்ப்பு வழங்குவதில்லை என்ற நிலைப்பாட்டையும் ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் கொண்டுள்ளது. இதற்கென முழுமைப்பொறுப்பும் அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# வீரச்சாவடைந்த போராளிகளுக்கு குடாநாட்டில் உணர்வுபூர்வ அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சர்வதேசக் கடற்பரப்பில் கடந்த 10 ஆம் திகதி கடற்படையினரின் தாக்குதலில் வீரச்சாவடைந்த பதினொரு போராளிகளின் வீரவணக்கக்கூட்டங்களும் திருவுருவப்படங்கள் தாங்கிய ஊர்திப்பவனியும் நேற்று முன்தினம் குடாநாட்டில் உணர்வுபூர்வமாக நடைபெற்றன.

நினைவஞ்சலிக் கூட்டங்கள் நல்லூர், மருதனார்மடம், சாவகச்சேரி, கொக்குவில், தீவகம், கொடிகாமம், அரியாலை ஆகிய இடங்களில் நடைபெற்றன.

மாவீரர் அம்பிகைவாணனின் நினைவஞ்சலிக்கூட்டம் - கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.


மாவீரன் நவநீதனின் நினைவஞ்சலிக்கூட்டம் - கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்று, திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி கொக்குவில், கோண்டாவில் ஊடாகக் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் பான்ட் வாத்திய இசையுடன் கொண்டுவரப்பட்டது. மாவீரர் துயிலும் இல்லத்தில் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற்று, இவ்விரு மாவீரர்களின் நினைவுக்கற்களுக்கு- அவர்களது பெற்றோர்கள் மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து போராளிகளும், மக்களும் மலரஞ்சலி செலுத்தினர்.

அத்துடன், கொடிகாமம் திருநாவுககரசு மகா வித்தியாலயத்தில் நினைவஞ்சலிக்கூட்டம் - போராளி மாறன் தலைமையில் நடைபெற்றது. பொதுச்சுடரினைக் கொடிகாமம் துயிலுமில்லப் பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றிவைக்க, சிறப்புரையை கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் சிறிநாத் நிகழ்த்தினார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில வேலணையிலுள்ள பழைய பஸ் கொம்பனிச் சந்தியிலிருந்து பாடசாலை மாணவர்களின் பான்ட்வாத்திய இசையுடன், ஊர்திப்பவனி ஆரம்பமாக- பின்னால் வீரச்சாவடைந்த பதினொரு போராளிகளினதும் திருவுருவப்படம் தாங்கிய ஊர்திவர, ஊர்திக்குப் பின்னால் பல பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், பாடசாலை மாணவர்களும் மற்றும் பொதுமக்களுமாக பெருமளவானோர் பவனியாக வங்களாவடிச் சந்திக்குச் சென்று, அங்கிருந்து வேலணை சரஸ்வதி மகாவித்தியாலயத்திற்குச் சென்றனர். பின்னர் இங்கு அஞ்சலிக்கூட்டமும், அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன. புங்குடுதீவு பலநோக்குக்கூட்டுறவுச்சங்கத்தலைவர் ம.கனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்- பொதுச்சுடரினை தீவகக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அருந்தவமும், ஈகச்சுடரினை மாவீரர்களின் பெற்றோர்களும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் ஏற்றினார்கள்.

பின்னர் தீவகக்கோட்டப் பொறுப்பாளர், வேலணை உதவி அரசாங்க அதிபர், அரசியற்துறையைச் சேர்ந்த பாவலன் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினார்கள். இதனைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டமும், அஞ்சலி நிகழ்வுகளும் நிறைவுபெற்றன. (லி,ரா,34)

ICC Cricket World Cup SOUTH AFRICA 2003



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




# வச்சுக்கவா FINAL MATCHஐ நெஞ்சுக்குள்ளே



கங்கூலி - நிழல் நிஜமாகுமா?

இதோ வந்துவிட்டது கடைசித் திருவிழா. நீண்ட நாட்களாகக் காத்திருந்த அந்தக் காலம் வந்துவிட்டது. "ஜோகன்னாஸ்பேர்க்"கில் இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் போரிடப்போகின்றன. இலங்கை நேரப்படி பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகும் இப்போட்டி, இரு அணிகளும் கடும் உழைப்பினால் வியர்வைகள் சிந்தி, பல தடைகளையும் தாண்டி நீண்டநாள் கனவுடன் விளையாடுகின்ற போட்டி.

சிலர் நினைக்கக்கூடும், அவுஸ்திரேலிய அணி முன்னர் விளையாடியதுபோல் மிக மிக இலகுவாக இந்திய அணியை வெற்றி கொள்ளும் என்று. நிச்சயமாக அது மாத்திரம் நடைபெறாது. இந்தியா இப்போது நல்லாய்க் கற்றுவிட்டது. எந்த வகையான **BOWLING**, எந்த வகையான **BATTING** அத்தனைக்கும் **REACTION** கொடுக்க இந்தியா துணிந்து விட்டது. இதனால்தான் என்னவோ இந்திய அணி 8 தொடர் வெற்றிகளைச் சுவைத்து நிற்கின்றது. அகதர், அக்ரம், சமிந்த வாஸ், முரளி, அன்டர்சன், பொன்ட் எல்லோரின் பயமுறுத்தல்களையும் தாண்டி இன்று நிமிர்ந்து நிற்கின்றது. லீயின், **OFF STUMP** க்கு வெளியே **TURN** பண்ணும் வேகப் பந்தையும், மக்ராவின் நிலத்தில் விழுந்து சடீரென சற்று உயர்ந்து வெளியேறும் அதிவேகப் பந்தினையும் கண்டு பாடம் கற்றுவிட்டார்கள். அந்தவகையான பந்துவீச்சுக்களுக்கெல்லாம், தேவையற்ற விதத்தில் **BAT** இனைக் கொடுத்து **CATCH** முறையில் அவுட்டாக முனையமாட்டார்கள்.

இந்திய அணியின் சச்சின், கங்கூலி, ஷேவாக் ஆகியோரில் இருந்து மொங்கியா வரைக்கும் கணிசமான அளவு ரன்களைப் பெற முற்படுவார்கள். இவர்களில் யாராவது சதம் அடிக்கவும் வாய்ப்புள்ளது. லீ, மக்ரா ஆகியோருக்கு வேலை குறைவு என்றே கூறப்படுகிறது. சிலவேளை இவர்களின் **BALL** க்கு அதிக ரன்களைப் பெறவும் வாய்ப்புள்ளது.

அவுஸ்திரேலிய அணியின் கில்கிறிஸ்ட், ஹேடன் மற்றும் பெவன் ஆகியோரின் **BATTING** இந்திய அணிக்குச் சவாலாக அமையப் போகின்றது. இவர்களின் **WICKETS** களை எடுத்தால் இந்திய அணி துணிந்து நிற்கலாம்.

இந்திய அணியின் மும்மூர்த்திகளுடன், ஹர்பஜன் சிங் மற்றும் தினேஷ் மொங்கியா ஆகியோர் நல்ல ஒரு பெறுதிகளைக் காட்டுவார்கள்.

அவுஸ்திரேலிய அணி தொடர் வெற்றிகளால் உலக சாதனை படைத்து அசைக்க முடியாத **BOWLING** வரிசை, தகர்க்கமுடியாத **BATTING** வரிசை, ஆவேசமான **FIELDING** இவையெல்லாவற்றுடனும் நல்ல வழிகாட்டல், சிறந்த ஒற்றுமையைக் கொண்டுள்ள அணி. இவர்களின் இந்த அதிதிறன் மிக்க விளையாட்டால் எதிரணி பயந்து, உலகம் வியந்து நிற்கின்றது. அதுவும் **WORLD CUP FINAL** என்று வந்துவிட்டால் எப்படி நிற்பார்கள் என்று சொல்லவே தேவையில்லை.

இவர்களுடன் முகம் கொடுப்பது இந்திய அணிக்கு கடினம்தான். ஆனாலும், அண்மைக்காலப் போட்டிகளில் இந்திய அணியின் விளையாட்டுக்களைப் பார்க்கும்போது, அவுஸ்திரேலிய அணியுடன் சமதையாக அல்லவா நிற்கின்றது.


ரீக்கி பொன்டிங் - கிண்ணத்தையும் தூக்குவேன்

எப்படி இருந்தாலும் இன்றைய போட்டி மிக மிக விறுவிறுப்பு, இரசிகர்கள் நெஞ்சிலே படபடப்பு, இரு அணிகளுக்கும் வெற்றிவாய்ப்பு **FIFTY-FIFTY.**

இவர்களில் கை.ஃ.ப், யுவராஜ் சிங் ஆகியோரின் பங்குக்கு **PLUS ONE.** ஆக மொத்தம் வெற்றிக் கனி கிடைப்பதற்கு சாதகம் இந்திய அணியிடம் தான்....? என்று பலர் கூறுவது உண்மையாயின், எல்லோரும் விரைவோம் " ஜோகன்னர்ஸ்பேர்க்" இற்கு. ஷெப்பட் ஐயா, பக்னர் ஐயா நீங்களும் **HERO** க்களாக ஜோகன்னர்ஸ்பேர்க் வந்துவிட்டீர்கள். உங்களையும் ரசிகர்கள் வரவேற்கிறோம். உங்கள் இருவரையும் கண்டாலே எங்களுக்கெல்லாம் ஒரு கிளுகிளுப்பு.

யாருக்கு இந்தக் கிண்ணம். கிண்ணத்தைத் தூக்கப் போவது வலதுகையா? இடதுகையா?

**TENSION** தாங்கலப்பா.


வீ.ஏ.கோவி

# அவன் ஆயிரத்தில் ஒருவன்

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான அரையிறுதிப் போட்டியில் துடுப்பாட வந்த கில்கிறிஸ்ட் பவிலியன் திரும்பிய முறை, பல லட்சக் கணக்கான கிரிக்கெட் ரசிகர்களை ஆச்சரியப்பட வைத்தது. இப்பொழுது கூட அரவிந்த + சங்கக்கார கூட்டு அடம் கில்கிறிஸ்டை அவுட்டாக்கவில்லை என்ற முடிவே மேலோங்கி நிற்கிறது. ஆனால், நடுவர் என்ன தீர்மானித்தார் என்று யோசிக்காமல், ஒரு கனவானாகத் தான் **OUT** என்று தன் மனச்சாட்சி கூறியதால், உண்மையிலேயே ஒரு நாயகனாக பவிலியன் நோக்கித் திரும்பிப் போய்விட்டார். அதுவும் அரையிறுதி ஆட்டம், எதிர்த்தரப்பு எதிர்பாராமல் உலுப்பிவிடும் இலங்கை அணி, எண்ணிக்கையும் 200 சொச்சம்தான். இந்த நிலையில் கில்கிறிஸ்ட் மேற்கொண்ட நடவடிக்கையை என்ன சொல்ல. இது பற்றிப் பின்னர் நிறையவே கருத்துக்கூறினார் கில்கிரிஸ்ட். அதில் ஒன்றுமட்டும் முக்கியமானது. இத்தகைய தன்மைகள் கிரிக்கெட் ஆட்டத்தில் வர வேண்டும் என்று கருத்துக்கூறியிருப்பவர், நேர்மை முக்கியமானதல்லவா? என்கிறார்.


வோல்ஷ் - அன்புக்கு சரண்டர்

பல வருடங்களுக்கு முன் பாகிஸ்தான் - அவுஸ்திரேலிய டெஸ்ட் ஆட்டம் ஒன்று. இக்பால் காசிம் துடுப்பெடுத்தாடுகிறார். ஆரம்பத்திலேயே ஒரு **NICK**. சிலிப்பில் கெப்லர் வெஸல்ஸ் லபக்கென்று அமுக்கி விடுகிறார். **OUT** கொடுக்கப்படுகிறது. காசிம் வெளியேறுகிறார். அப்போது வெஸல்ஸ் விரைந்துவந்து, அந்தக் **CATCH GRASSED** என்று நடுவரிடம் கூற ,திரும்ப அழைக்கப்பட்டு தொடர்ந்து ஆடிய காசிம் செஞ்சரி போடுகிறார். செஞ்சரி போட்டதும், தான் கொண்டாடுவதற்கு முன் ஓடிச்சென்று கெப்லர் வெஸல்சுக்கு கைலாகு கொடுக்கிறார். கடந்துபோன உலகக்கிண்ணச் சுற்றுப்போட்டிகள் ஒன்றில் பாகிஸ்தான் - மேற்கிந்திய முக்கியமான ஆட்டம். பாகிஸ்தானின் இறுதிச்சோடி. பாகிஸ்தானுக்கு ஒரு சில ஓட்டங்கள் தேவை. கொட்னி வோல்ஷ் பந்து வீசுகிறார். பந்தை எதிர்கொள்பவர் அப்துல் குவாதிர். பந்துவீச்சுப் பக்கத்தில் இருந்த வீரர், எப்படியாவது வென்றுவிட வேண்டும் என்ற ஆர்வத்தில், வோல்ஷ் பந்தை வீச முன்பே கிறிசுக்கு முன்னால் பாய்ந்து விடுகிறார். வோல்ஷ் பேல்சைத் தட்டிவிட்டால் அது சட்டபூர்வமான **OUT**, பாகிஸ்தான் **ALL OUT**, மேற்கிந்திய அணி வெற்றி. ஆனால், வோல்ஷ் வந்த வேகத்தில் பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரரை அவுட்டாக்காமல், பந்து வீசாமல் நிறுத்திக் கொண்டு, கிறிசுக்கு முன்னால் பாயவேண்டாம் என்று பாகிஸ்தான் வீரருக்கு எச்சரிக்கை செய்துவிட்டு, தனது பந்து வீசும் ஆரம்பப் புள்ளிக்கு ஆறுதலாக நடந்து சென்றுவிட்டார். ஆனால், அதன்பின் அந்த இறுதிச்சோடியைப் பிரிக்க இயலவில்லை. அப்துல் குவாதிர் இரண்டு சாத்துச்சாத்தி அணியை வெல்லவைத்தார். மேற்கிந்திய அணி அந்த ஆட்டத்தில் தோல்வி.


கில்கிறிஸ்ட் - மனச்சாட்சி பெரிசுங்க

இப்படி எத்தனையோ சம்பவங்கள் இருக்கும். நினைவில் குறைவு. மறந்தது நூற்றுக்கணக்கானவை. ஒன்றைமட்டும் கூறலாம். கிரிக்கெட் வீரர்களின் சாதனைகள் விளையாட்டில் எத்தனையோ இருக்கலாம். ஆனால், அவை செய்திகளாகவே பேசப்படும். மேற்கண்ட விடயங்கள்.....? இவைதான் என்றும் இதயத்தால் பேசப்படும். 2003 உலகக்கிண்ணப் பரிசளிப்பு மேடையில் கண்டிருப்பீரகளே ஒரு நபர், மார்க் டெய்லர் என்று. அவர் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர். தனது ஒரு இன்னிங்சில் டொன் பிரட்மனின் பெரும் எண்ணிக்கையைச் சமப்படுத்தி விட்டார். ஆனால் பிரட்மனின் **RECORD** ஐ முறியடிக்கக்கூடாது என்பதற்காக ஆட்டத்தை நிறுத்திக்கொண்டு பவிலியன் திரும்பிவிட்டார். இது எப்படியிருக்கு. இதனால்தான் கிரிக்கெட்டை மணிக்கணக்காக, நாட்கணக்காக, மாதக்கணக்காக நாங்கள் பார்க்கிறோம். இதற்கு நீங்கள் எங்களுக்குச் சூட்டும் நாமம் "கிரிக்கெட் பனி", "கிரிக்கெட் விசர்" என்பதாக இருந்தால் நாங்கள் சந்தோஷமாக அதனை ஏற்றுக்கொள்கிறோம். இறுதியாக கில்கிரிஸ்ட்! நீங்கள் அற்புதமான முன்னுதாரணம் ஒன்றிற்கு இந்த 2003 உலகக்கிண்ணப் போட்டியின்போது உரிமையாளர் ஆகிவிட்டீர்கள். உங்கள் புறத்திறமை அதியுச்சம். அதேபோல் உங்கள் அகச் சுத்தம் அற்புதம். **HATS OFF TO YOU.**

நிர்மலன்

# மனிதரில் இத்தனை நிறங்களா?

மேற்கிந்திய கிரிக்கெட் அணியென்பது ஒரு நாட்டின் அணியல்ல. தன்னாதிக்கமும், இறைமையும் உள்ள பல நாடுகளின் சேர்க்கையே மேற்கிந்திய அணி. இது எந்தவொரு சர்வதேச கிரிக்கெட் அணிக்கும் இல்லாத அபூர்வமான இணைப்பாகும். புவியியல் ரீதியில் உலகின் மேற்குப்பாகத்தில் வட அமெரிக்கக் கண்டத்தின் தென் கிழக்கே அமைந்த, கரிபியன் கடலில் உள்ள சின்னச் சின்னத் தீவுகள் பல்லாயிரம். இவை பல தனித்தனி நாடுகளாக அமைந்துள்ளன. கரிபியன் கடலில் உலகப் படத்தில் கண்ணுக்குத் தெளிவாக தெரியக் கூடியவை கியூபாவின் ஹெய்த்தி, டொமினிகன் குடியரசு நாடுகள் அடங்கிய தீவுகளாகும். மற்றைய எல்லாம் சின்னஞ்சிறியவை. இதிலும் மேற்குறித்த இரண்டு தீவுகளிலும் கிரிக்கெட் ஆர்வம் குறைவு.


எந்த நாடா இருந்தா என்ன, நாங்க கரீபியன்ஸ்

உண்மையில் கிரிக்கெட் விளையாடும் நாடுகள் என்று குறிப்பிடக்கூடியவை ஜமெய்க்கா - சென். கீட்ஸ் - நெவிஸ் - அன்ரீருவா, பார்ப்போஸ் - கிரெனடா - டிரினிடாட் டுபாகோ - தென் அமெரிக்கக் கண்டத்தின் வடபால் அமைந்துள்ள கயானா. (சில நாடுகள் விடுபட்டிருக்கலாம்) இவையெல்லாம் சகல வேறுபாடுகளையும் மறந்து கிரிக்கெட்டில் ஒன்று சேர்ந்தவை. இதற்கு முக்கிய காரணமாக அமைந்தவர் **GREAT** கிரிக்கெட் வீரர், பிராங் வொரல். ஆனால், அந்த காலம் மெல்ல மெல்ல முடிவுக்கு வருகிறதுபோலத் தெரிகிறது. இதுவே மேற்கிந்திய அணியின் பயிற்றுநர் றொஜர் ஹாப்பரின் மனத்துயரமாக இருக்கிறது. இவரது பயிற்றுநர் ஒப்பந்த காலமும் முடிவுக்கு வருகிறது.

ஹாப்பர் கருத்துக்கூறும்போது, பிராந்திய வேறுபாடுகள் குறையாத வரை மேற்கிந்திய அணியை முன்னிருந்த உலகப்புகழ்பெற்ற தரத்துக்குக் கொண்டு வருவது கடினம் என்று மனம் வருந்தியிருக்கிறார். நாங்கள் தனித் தனித் தீவுகள் சார்ந்தவர்கள் என்ற எண்ணம் வளர்ந்துகொண்டு வருவது நல்லதல்ல என்கிறார் மேலும்.

உலகக் கிண்ணப்போட்டிகளின் முதல் சுற்றின் பின், பார்படோஸ் வந்து சேர்ந்தபோது, நிருபர்களின் கேள்விகளுக்கு இந்த விடயங்களை ஹாப்பர் கூறியுள்ளார். கரிபியன் பிராந்தியத்தில் எல்லோரும் மேற்கிந்திய அணி வெல்ல வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால், தத்தம் நாட்டவர் தான் கூடுதலாக அணியை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். இது கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்பது போலாகும் என்கிறார் அவர். புதிய பயிற்றுநராக வொப் வூல்மர் மேற்கிந்திய அணியைப் பொறுப்பேற்கக்கூடும் என்று எதிர்பார்க்கப்படும் வேளையில், யார் பொறுப்பேற்றாலும் இந்த பிரிவினை எண்ணம் இருக்கும் வரை நிலைமை கவலைக்கிடம்தான் என்கிறார், மேற்கிந்திய முன்னாள் சகலதுறை விளையாட்டு வீரர் றொஜர் ஹாப்பர்.

இப்போது தேவை ஒரே சிந்தனை, ஒரே நோக்கு, ஒரே இலக்கு, ஒரே குடும்பம் என்ற உணர்வு. நாடுகள் தம் சிந்தனையை தூய்மைப்படுத்தி இதனைச் செய்யவேண்டும். மேற்கிந்தியத் தீவுகளே உங்களை மீண்டும் உலகின் உயர் சக்தியாக மாற்றப்போவது யார்? **SIR. FRANK WORREL** மீண்டும் பிறக்கத்தான் வேண்டுமோ?

ஜோசப் கிருஷ்ணா

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் அனுசரணை**

COMMERCIAL BANK
Our Interest Is In You

Ensure a secure future for your child, open an ARUNALU MINORS account with Srilanka's best bank.

ARUNALU



நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வவுனியாவின் 13 கிராமங்களில் முதற்கட்டமாக மீள்குடியேற்றம்!

## தமிழ் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்பாக

வவுனியா மாவட்டத்தில், தாண்டிக்குளத்திலிருந்து ஓமந்தை வரையுள்ள பதின்மூன்று கிராமங்களில், மீள்குடியமரவும் இருபத்தைந்து கிராமங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபடவும் படைத்தரப்பால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில், அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே மேற்படி முடிவு படைத்தரப்பால் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய வவுனியா மாவட்ட மீள்குடியேற்றத்திற்கான கூட்டத்தில் இலங்கைப் படைத்தரப்பு, போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அதேவேளை - மீள்குடியமர்வு நடவடிக்கைகளின்போது, மேற்படி பதின்மூன்று கிராமங்களிலும் குடியமர்பவர்கள் - இராணுவச் சோதனைச்சாவடிகளில் தமது பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இராணுவத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (01)

உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
இறுதி ஆட்டம்
அவுஸ்திரேலியா Vs இந்தியா - WANDERERS - JOHANESBURG - 2 pm.

# கண்காணிப்புக் குழுத் தலைவர் பதுமனுடன் திருமலையில் பேச்சு

(கொழும்பு)

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்து, கடந்த வெள்ளியன்று கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சனுக்கும், புலிகளின் திருகோணமலைத் தளபதி கேணல் பதுமனுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின்போது ஆராயப்பட்டது.

இதன்போது, திருமலை அரசியற் பொறுப்பாளர் திலக்கும் கூட இருந்தார். சீனன்குடாவுக்கு விமானப்படை ஹெலிகொப்ரரில் வந்த ரெலவ்சன், திருமலையில் உள்ள முப்படைகளினதும், பொலிஸாரினதும் தலைவர்களையும் சந்தித்து உரையாடினார். பின்னர் அவர் புலிகளைச் சந்திக்க சேனையூர் சென்றார்.

# பிச்சைக்காரர்களுக்கும் சமுர்த்திக் கொடுப்பனவு!

(கொழும்பு)

தெருவோரப் பிச்சைக்காரருக்கும், சமுர்த்தி அதிகாரசபை சமுர்த்திக் கொடுப்பனவுகளை வழங்கவுள்ளது.

நாடளாவிய ரீதியில் தெருவோரங்களில் பிச்சையெடுப்பவர்களின் விபரங்களைத் திரட்டும்படி அனைத்து மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும் சமுர்த்தி அபிவிருத்தி அமைச்சர் கே.ஆர்.டீ சிறிசேன பணிப்புரை விடுத்துள்ளார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிச்சைக்காரர்களின் உண்மை நிலைவரங்களையும், தகவல்களையும் முதற்கட்டமாக திரட்டும்படி பணிப்புரை விடுத்த அமைச்சர், அவர்களுக்கு வாக்குரிமைகளையும் அரசாங்கம் அளிக்கவுள்ளதாகக் கூறியுள்ளார். (01)

# வெற்றி தோல்வி இன்றி முடிவு

மகாஜனாக் கல்லூரிக்கும் ஸ்கந்த வரோதயாக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற 'நாயகர்களின் கிரிக்கெட் போட்டி' வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணி, முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 186 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மகாஜனாக் கல்லூரி, சகல விக்கெட்டுக்களையும் இழந்து 128 ஓட்டங்களைப் பெற்றது. இரண்டாவது இன்னிங்ஸில் ஸ்கந்தா, 6 விக்கெட் இழப்பிற்கு 77 ஓட்டங்களைப் பெற்றதோடு ஆட்டம் நிறைவுற்றது.

# உழவியந்திரத்திலிருந்து வீழ்ந்து இளைஞன் ஸ்தலத்தில் பலி!

உழவு இயந்திரத்தில் அகப்பட்டு இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.

வரணிப் பகுதியில் மணல் ஏற்றும் பொருட்டு உழவு இயந்திரத்தில் சென்ற இந்த இளைஞன், உழவு இயந்திரத்தின் "மட் காட்" இன்மேல் அமர்ந்து பிரயாணம் செய்தபோது, தவறுதலாகக் கீழே விழுந்தவேளை உழவு இயந்திரத்தின் சில் லுகளில் இவர் நசியுண்டு ஸ்தலத் திலேயே மரணமானார்.

நேற்றுக்காலை புத்தூர் விரவாளிப் பகுதியில் இடம்பெற்ற மேற்படி சம்பவத்தில் - குமாரசாமி வீதி, புத்தூர் கிழக்கைச் சேர்ந்த கந்தசாமி சுவிந்தன் (வயது 19) என்னும் இளைஞனே உயிரிழந்தவராவார். (110,சு)

# இந்தியக் கடற்படையினரால் மன்னார் மீனவர் இருவர் கைது

(கொழும்பு)

நேற்றுமுன்தினம் தலைமன்னார் கடற்பகுதியில் மீன்பிடிக்கச்சென்ற ஆறு மீனவர்களில் இருவர் மீண்டும் கரைக்குத் திரும்பவில்லையெனத் தெரியவருகின்றது.

அவர்களுடன் கூடச் சென்ற மீனவர்களில் கரைக்குத் திரும்பிய ஏனைய நான்கு மீனவர்களின் கூற்றின்படி, இலங்கைக் கடற்பிரதேசத்திற்குள் தாம் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் இந்தியக் கடற்படையினர் இலங்கைக் கடற்பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழைந்து, இரு மீனவர்களையும் கைதுசெய்து கொண்டுசென்றதாகத் தெரிவித்தனர்.

இதனையடுத்து, இவ்விரு மீனவர்களையும் மீட்டெடுக்கும்படி பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார். (01)

## ஈரான் மீதும்.. தற்கொலைத் தாக்குதல்

வடஈராக்கிய நகரான ஹலப்கொவில் உள்ள சோதனை நிலையத்தில், தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் குண்டை வெடிக்க வைத்ததில் நால்வர் பலியாகினர். கொல்லப்பட்டவர்களில் ஒருவர் அவுஸ்திரேலியப் பத்திரிகையாளரும் ஏனையோர் குர்திஷ் போர் வீரர்களுமாவர்.

## சமாதானச்...

மக்கள் பிரதிநிதிகள் சபையின் சர்வதேச உறுப்பினர்கள் குழுவினரது, ஆசிய பசுபிக் பிராந்தியப் பிரிவு சம்பந்தமான விவாதம் நடைபெற்றபோதே, உதவி வெளிவிவகார அமைச்சர் றொக்கா இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

அங்கு உரை நிகழ்த்திய யு.எஸ். எயிட் அமைப்பின் உதவி நிர்வாக அதிகாரி வெண்டிச் செம்னேன், சமாதான நடவடிக்கைகள் இலங்கையில் வெற்றியடைந்து வருகின்றன. வெளிநாட்டு உதவிகளை உரிய முறையில் நிவாரணத் திட்டங்களில் செலவிடுவதற்கான திட்டங்களை அந்த நாடு கொண்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

## வட - கிழக்கு...

பார்ப்பும் அழுத்தமும் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இருப்பதை நாம் மறுக்க முடியாது.

எதிர்வரும் ஜுன் மாதம் எங்களுக்கு முக்கியமான காலம். இதற்கு முன்பதாக - வட, கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி பற்றிய நிலையானதொரு உடன்பாடு ஒன்றை, நாம் விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன், ஆலோசனையுடன்தான் அப்பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியும்.

அதேவேளை - அரசியல் தீர்வு பற்றிய தெளிவான முன்வரைவொன்றை உருவாக்க வேண்டிய அவசியம் எமக்கு இருக்கிறது. உலக நாடுகளும் அதை எதிர்பார்க்கின்றன. எவ்வாறான தீர்வை நோக்கி நாம் செல்கின்றோம் என்பதற்கான அடிப்படையை, ஜுன் மாதத்துக்கு முன் வரைய வேண்டும்.

தற்போது நடைபெற்றுவரும் அமைதி முயற்சிகளினூடாக - நல்லதொரு தீர்வை எட்ட முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு அரசாங்கத்தை ஊக்கப்படுத்துகிறது. மோதல் சம்பவங்கள் சில நடந்தாலும் அவற்றை நாம் பெரிது படுத்திக் கொண்டிருக்க முடியாது என ரணில் விக்கிரமசிங்க அங்கு குறிப்பிட்டார். (200)

# தலைமைப் பதவியை துறப்பதாக சனத் ஜயசூரிய அறிவிப்பு!



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைவர் சனத் ஜயசூரிய, தமது தலைவர் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்துள்ளார். எனினும், அவர் தொடர்ந்தும் அணியில் ஒரு வீரராக அங்கம் வகிப்பார். இது சம்பந்தமான கடிதத்தை அவர் விளையாட்டுத்துறை அமைச்சிடம் சமர்ப்பித்துள்ளதாக அறிவிக்கப்படு கிறது. இந்த இராஜினாமாக் கடிதத்தை அமைச்சர் ஏற்றுக் கொண்டாரா என்ற தகவல் நேற்றிரவுவரை வெளியிடப்படவில்லை.

# 20 புதிய பஸ்கள் விரைவில் யாழ்.டிப்போவுக்கு கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஏப்ரல் 15 ஆம் திகதிக்கிடையில் 20 பஸ்கள் யாழ். வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு வழங்கப்படவிருக்கின்றது என யாழ். வந்த மத்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் யூ.எல்.எம். பாறுக் தெரிவித்தார்

நேற்று மாலை கோண்டாவில் டிப்போவில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, இவர் இன்று பருத்தித்துறை, காரைநகர் டிப்போக்களுக்கும் விஜயம் செய்யவுள்ளார். இவர் தலைவராகப் பதவியேற்றபின் முதன்முறையாக தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார். (சு)

## ஏப்ரல் முதல்...

ஓமந்தை தடைமுகாமிலும் முகமாலை தடைமுகாமிலும் உள்ள சூனியப் பிரதேசத்தில், வாரத்தில் ஏழு நாட்களும் பொதுமக்களின் பாதுகாப்பான பயணத்தினை உறுதி செய்வதற்கு வழமையான நேர அட்டவணையுடன் கடமையில் ஈடுபடலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

## பாதிப்புற்ற...

ஓவ் காஸ்', 'உகண'ஆகிய கப்பல்கள் கடலில் மூழ்கியதால், பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியாகியுள்ள வணிகர்கள் மற்றும் தொழிலின்றி ஏங்கி நிற்கும் ஏனைய யாழ். வணிகர்களின் நிலை பற்றி அங்கு எடுத்துக் கூறப்பட்டது.

இதன்போது - பிரதமர், இலங்கை அரச வங்கிகள் ஊடாக வருடாந்தம் 6 வீத வட்டியில் இலகு தவணைக் கடன் வழங்குவதற்கு ஒப்புக்கொண்டார். இவற்றுக்காக ரூபா 500 மில்லியன் ஒதுக்கிக் கொடுக்குமாறு நிதியமைச்சின் செயலாளர் சரித்த ரத்வத்த, பிரதம மந்திரியின் ஆலோசகர் ஆர். பாஸ்கரலிங்கம், பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோருக்கு அவர் பணிப்புரை விடுத்தார்.

இரு மாதங்களுக்குள் இவ் வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தைப் பார்வையிட தாம் யாழ். வருகைதரவுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

சுஜெ சித்த மருத்துவ நிலையம்
SUJAY SIDDHA MEDICAL CENTRE
சித்த மருத்துவப் பட்டதாரிகளினால் (BSMS)



* மருத்துவ ஆலோசனைகள்
* சித்த மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.
* சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் தொக்கண சிகிச்சை (Oil application and massaging) செய்யப்படும்.

சிகிச்சை நேரம்:- தினமும் மாலை 4.30-7 மணிவரையும்
சனி, ஞாயிறு:- காலை 9-12 மணிவரையும்
மாலை 4-7மணிவரையும்
இடம்:- 83, கச்சேரி நல்லூர் வீதி (சி/707) நிர்வாகி

S.P.Enterprises
Communication, Stationery, Travels & Tours

✪ உள்ளூர், சர்வதேச (IDD), இணைப்பு அழைப்புக்கள் (Connecting Calls) துரிதமாகவும், துல்லியமாகவும், குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம். சர்வதேச அழைப்புக்கள் ரூ 8 இலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
✪ தொலைத்தொடர்பு நிலையங்களுக்கு இணைப்பு அழைப்புகளுக்கு (Connecting Calls) சலுகை வழங்கப்படும்.

379, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
T.P :- 021-2225735
021 - 2225736
(சி/705)

வாழ்க வளமுடன்
முதலாவது அகவையில் இரண்டாவது அகவையில்



HAPPY BIRTHDAY



பெயர் :வாசன் அபிசேக்
முகவரி:காளிகோயிலடி, மீசாலை மேற்கு.
பெயர் :சி.சுவர்ணன்
முகவரி: 3 ஆம் குறுக்குத்தெரு, பாசையூர்
நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.